# இன்று பதவி துறக்கிறார் ரணில்

பக்கங்கள்: 20 + iv

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

கொழும்பு, பெப். 13
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்தும், பிரதமர் பதவியில் இருந்தும் ரணில் விக்கிரமசிங்க இன்று விலகவுள்ளார் என ஐ.தே.க. வட்டாரங்கள் இன்று அதிகாலை 'காலைக்கதிரு'க்குத் தெரிவித்தன.

பக்கம் 03 ≫



விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 01 செவ்வாய்க்கிழமை 13.02.2018 கதிர் 100

# தமிழின நன்மை நோக்கி ஒன்றுபடுங்கள்!


## தமிழ் சமூகப் பிரமுகர்கள் தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 13
தமிழினத்தின் எதிர்கால நலனில் அக்கறை கொண்டு தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது அவசியமாகியுள்ளது.
இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ்ச் சமூகப் பிரமுகர்கள்.
கம்பன் கழகத்தின் முன்னெடுப்பில் அவர்கள் இணைந்து நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:
உலகம் ஈழத்தமிழினத்தின் மேல் கொண்ட அனுதாபம், கால ஓட்டத்தில் மெல்ல மெல்லக் கரைந்து வரும் இவ்வேளையில், தமிழ்த் தலைவர்களான உங்கள் மத்தியில் வெடித்திருக்

பக்கம் 18 ≫

# தீர்வுக்காக உழைக்க வாருங்கள்!

## மஹிந்தவை அழைக்கிறார் சம்பந்தன்




**திருமலை, பெப்ரவரி 13**
**"இந்தத் தேர்தல் வெற்றி மஹிந்தவின் கரங்களை மேலும் பலப்படுத்தியுள்ளது. எனவே அவர் தனது ஒற்றுமையை வெளிப்படுத்தவேண்டும். இந்தத் தேசியப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். இதனைத் தீர்ப்பேன் என்று அவர் ஏற்கனவே சர்வதேசத்துக்கு உறுதியளித்துள்ளார். அந்த வாக்குறுதியை மஹிந்த நிறைவேற்றவேண்டும். அவரை நாங்கள் வரவேற்கிறோம்."**

பக்கம் 18 ≫

## ஒன்றிணையுங்கள்

### தமிழ்க் கட்சிகளுக்கு யாழ். ஆயர் அழைப்பு



யாழ்ப்பாணம், பெப் .13
தமிழ்மக்களின் இன்றைய நிலை - அவர்களின் அவசியத்தேவைகள் - முன்னுரிமைகள் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு எல்லா வேறுபாடுகளையும் மறந்து

பக்கம் 03 ≫

## கூட்டமைப்பின் பங்காளிகள் நேற்றுச் சந்திப்பு

உள்ளூராட்சிச் சபைகளில் ஆட்சி அதிகாரத்தை முரண்பாடுகளின்றிச் சுமுகமாக நடத்திச் செய்வதற்கான திட்டம் ஒன்றைத் தயாரிப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் நேற்றுக் கூடி ஆராய்ந்துள்ளன.

பக்கம் 03 ≫

# பொதுத் தேர்தலே பொருத்தமான வழி

## அரசுக்கு மஹிந்த அறிவுரை

கொழும்பு, பெப் .13
ஆட்சிமாற்றம் ஒன்று அவசியமென்பதை உள்ளூராட்சித் தேர்தல் மூலம் மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். எனவே, நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்துப் பொதுத் தேர்தலை அரசு நடத்த வேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள ஸ்திரமற்ற நிலையை

பக்கம் 03 ≫



## சிக்கலில் மணிவண்ணன்

யாழ்ப்பாணம், பெப் .13
இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் யாழ். மாநகர சபை முதன்மை வேட்பாளரான சட்டத்தரணி வி. மணிவண்ணன் யாழ். மாநகர சபை உறுப்பினராகத் தெரிவாவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.
இலங்கைத் தமிழ்க் காங்கிரஸுக்கு யாழ். மாநகர சபையில் வட்டார ரீதியாக 9 ஆசனங்க

பக்கம் 18 ≫

## சபைகளின் முதல் அமர்வு மார்ச் 2 இல்

கொழும்பு, பெப். 13
புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி

பக்கம் 03 ≫



**இது ரகசியம் அல்ல!**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் இரண்டு பக்கத்தில் போட்டியாக வந்து இறங்கியிருக்கின்றன.

பக்கம் 03 ≫

## எனக்கு பிரதமர் பதவியா? மஹிந்தவிடம் கேளுங்கள்!

### விமான நிலையத்தில் கோட்டா

கொழும்பு, பெப். 13
நான் அமெரிக்கப் பிரஜையென்பதால் என்னால் எவ்வாறு பிரதமர் பதவியை வகிக்க முடியும். அதை நீங்கள் மஹிந்தவிடமே வினவ வேண்டும்.
- இவ்வாறு நேற்று

பக்கம் 18 ≫

## மைத்திரி - ரணில் இடையே இணக்கம் எதுவுமேயில்லை

கொழும்பு, பெப் .13
ஜனாதிபதி மைத்திரிபால - பிரதமர் ரணில் ஆகியோருக்கிடையில் எவ்வித இணக்கமும் எட்டப்படவில்லை என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிவித் துள்ளது.
உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோ

பக்கம் 03 ≫

## போட்டியிட்டுத் தோற்றவர்கள் பட்டியலில் நியமிக்கப்படார்!

### கூட்டமைப்பு உறுதியான நிலைப்பாடு

யாழ்ப்பாணம், பெப் .13
உள்ளூராட்சித் தேர்தலில் வட்டார ரீதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்களைப் பட்டியல் மூலம் உறுப்பினராக்குவதில்லை என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக உள்ளது எனத் தெரிய வருகின்றது.
சபைகளில் கிடைத்த போனஸ் ஆசனங்களுக்கு ஏற்கனவே பட்டியலில்

பக்கம் 18 ≫

## ஐ.தே.க விஞ்ஞாபனம்; சிவாஜி முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப் .13
ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாக வடக்கு மாகாண

பக்கம் 18 ≫

## கேப்பாபிலவில் இடையூறின்றி மக்கள் போராடத் தடையில்லை!

### அனுமதி வழங்கியது முல்லை. நீதிமன்று

முல்லைத்தீவு, பெப் .13
கேப்பாபிலவில் மக்கள் பொதுமக்களுக்கு இடையூறின்றித் தமது போராட்டத்தைத் தொடரலாமென அனுமதி வழங்கியுள்ளது முல்லைத்தீவு நீதிமன்றம்.
சுதந்திர தினத்தன்று கேப்பாபிலவில் போராட்டம் நடத்திய மக்களில் ஐவ

பக்கம் 18 ≫

# அரசு பதவி விலக வேண்டிய தேவை இல்லை: மக்கள் ஆணையை நிறைவேற்றப் போராடும்!

கொழும்பு, பெப்.13

பிரதமரை மாற்றுவதோ அல்லது அரசு இராஜினாமா செய்வதற்கோ எந்தவித தேவையும் ஏற்படவில்லை என்று சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சரும் அமைச்சரவை துணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

சில தரப்பினர் உள்ளூராட்சி மன்ற தேர்தலை அடுத்து அரசு பதவி விலக வேண்டும் என்று தெரிவித்தமை தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:-



உள்ளூராட்சி மன்ற தேர்தல் குறித்து ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்தி அரசின் குறைகளை சரிசெய்து முன்னோக்கி பயணிப்பதற்கு பிரதமரும் ஜனாதிபதியும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் வெற்றி பெற்று பிரதமர் ஆகும் கனவு அல்லது பொதுத் தேர்தலை நடத்துவதற்கு கனவு காணுவோரின் கனவுகள் நிறைவேறா.

முன்னாள் ஜனாதிபதிக்கு பிரதமர் பதவியை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியோ ஐக்கிய தேசியக் கட்சியோ இதுவரையில் ஆலோசனை முன்வைக்கவில்லை.

2015 ஆம் ஆண்டில் தற்போதைய அரசுக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளமை, ஊழல் மற்றும் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கே ஆகும். இதனைத் தொடர்ந்து முன்னெடுப்பதில் சமகால நல்லாட்சி அரசாங்கத்தின் தலைவர்கள் உடன்பாட்டுக்கு வந்துள்ளனர்.

மக்கள் ஆணைக்கு அமைவாக மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் போராட்டத்தில் தொடர்ந்தும் ஈடுபட்டிருக்கும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை தேயிலை உயர்தரத்தை கொண்டுள்ளது!




கொழும்பு, பெப். 13

இலங்கையின் தேயிலை உயர்தரத்தை கொண்டிருக்கிறது என ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த தேயிலை தொடர்பான ஆய்வு அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இங்கு இலங்கை தேயிலையின் தரம் தொடர்பில் மகிழ்ச்சி தெரிவிப்பதாக தேயிலை ஆணையாளர் ஜயந்த தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 4 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்த இந்த அதிகாரிகள் விவசாய பணிப்பாளர் நாயகம் இலங்கையில் சிறந்த தேயிலை ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களின் நிறுவனத்தின் அதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். தேயிலை தொழிற்சாலைகளையும் பார்வையிட்டுள்ளனர்.

தேயிலை தொடர்பில் இவர்களுக்கு ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டிருந்தால் இந்த ஆய்வுளின் மூலம் அவை நீங்கியிருக்கிறது.

இலங்கையின் தேயிலை தொடர்பாக இவர்கள் மேற் கொண்ட ஆய்வுகள் மிகவும் முக்கியமானவை. இலங்கைக்கு ரஷ்யாவில் தேயிலை சந்தை யை மேலும் விரிவுபடுத்துவதற்கு இது பெரிதும் உதவும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இவர்கள் இலங்கை தேயிலை தொடர்பாக ரஷ்ய அரசுக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு, கிழக்கு தொண்டர் ஆசிரியருக்கு நியமனம் வழங்கும் நாள் பிற்போடல்

### கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.13

வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர்களுக்கு நாளைமறுதினம் 15 ஆம் திகதி கல்வி அமைச்சின் ஊடாக நியமனம் வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த ஏற்பாட்டு திகதி பிற்போடப்பட்டுள்ளது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி அமைச்சிற்கு முன்னால் வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அனைவருக்கும் நியமனம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே இராதாகிருஷ்ணன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-



வடக்கு- கிழக்கு தொண்டர் ஆசிரியர்களுக்கு நாளைமறுதினம் 15 ஆம் திகதி கல்வி அமைச்சின் மூலமாக நியமனம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க நியமனம் பிற்போடப்பட்டுள்ளது. அதற்கு காரணம் அந்த வழங்கப்படவிருந்த நியமனத்தில் ஒரு சிலருடைய தகவல்கள் முறையாக இல்லாத காரணத்தால் அவர்களின் பெயர்கள் பட்டியலில் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

எனவே, இது தொடர்பாக பலரும் கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தனர்.அதனை தொடர்ந்தே இந்த நியமனம் பிற்போடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சு அமைச்சரவை பத்திரம் ஒன்றை தாக்கல் செய்துள்ளது அதற்கு பிரதமரும் அனுமதி வழங்கியுள்ளார்.

எனவே, எதிர்வரும் அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்பு அனைவருக்கும் அதனை வழங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் அமைதியாக இருந்து அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.இதற்காக போராட்டம் செய்வதை நிறுத்துமாறும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## விவசாய பொருள்களின் ஏற்றுமதி இரு மடங்காக அதிகரிக்கும்



கொழும்பு, பெப். 13

ஏற்றுமதி சார்ந்த விவசாய பொருள்களின் ஏற்றுமதி, கடந்த ஆண்டு அதிகரித்திருப்பதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் அறிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கை இரண்டு மடங்கினால் அதிகரிக்கப்படும் என்று அவர் கூறினார். கடந்த ஆண்டில் கறுவா, ஏலம் உட்பட ஏற்றுமதி பயிர்களினால் கிடைத்த வருமானம் 7 ஆயிரத்து 100 கோடி ரூபாவாகும்.

(க)

## சுயேச்சை குழு வேட்பாளர் மீது வவு. கற்குளத்தில் தாக்குதல்

வவுனியா, பெப்.13

வவுனியா கற்குளம் பகுதியில் சுயேச்சைக்குழுவில் போட்டியிட்ட க. இராமசாமி என்பவர் மீது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா கற்குளம் பிரதேசத்தில் வசிக்கும் இராமசாமி என்பவர் வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைக்கு சுயேச்சைக்குழுவில் போட்டியிட்டிருந்தார்.

இந் நிலையில் அப்பிரதேசத்தை சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்கள் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட அன்று இரவு தமது கட்சி வேட்பாளர் வெற்றிபெறவில்லை எனத் தெரிவித்து அந்தச் சுயேச்சை குழு வேட்பாளர் மீது தாக்குதல் மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் வவுனியா பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தாக்குதலுக்குள்ளானவர் தகவல் தெரிவிக்கையில்-

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட அன்று இரவு தான் வீட்டில் இருந்த சமயம் அங்கு வருகை தந்த சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த தியாகு என்பவர் என் மீது கதிரையால் தாக்குதல் மேற்கொண்டார். இதனால் காயமடைந்த நான் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றேன் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியா பொலிஸில் இந்தச் சம்பவம் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மேலும், இந்தச் சம்பவம் வவுனியா உதவித் தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலமாக முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

## இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெற்றுள்ள பெரும் வெற்றியை அடுத்து, கொழும்பு அரசியலில் பெரும்பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பிரதமர் ரணிலுக்கும், ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கும் இந்த வெற்றியால் கடும் அழுத்தங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே ஐ.தே.க. தலைமைப் பதவியில் இருந்தும், பிரதமர் பதவியில் இருந்தும் விலகுவதற்கு ரணில் முடிவெடுத்துள்ளார் என்று தெரிய வந்தது. நேற்று நண்பகலில் ரணிலை சந்தித்த ஐ.தே.கவின் முக்கியஸ்தர்கள், தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குப் பொறுப்பேற்று ரணில் ஐ.தே.க.தலைமையில் இருந்தும், பிரதமர் பதவியில் இருந்தும் விலக வேண்டும் என விடாப்பிடியாக நின்றனர்.

இதற்கு சம்மதம் வெளியிட்ட ரணில், இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் முடிவை அறிவிப்பதாகக் கூறினார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பு நேற்றிரவு 8.30 மணியில் இருந்துநள்ளிரவுவரை நீடித்தது. இதில் ரணில் பதவி விலகுவதை சு.க. அமைச்சர்களும் விரும்புகிறார்கள் என்று ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

இதனையடுத்து ரணிலின் பதவி விலகல் தொடர்பான அறிவிப்பு இன்று வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரணில் பதவி விலகினால் ஐ.தே.கவில் இருந்து புதியவர் ஒருவர் பிரதமராக நியமிக்கப்பட வாய்ப்புக்கள்உள்ளதாக ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

புதியவர் ஒருவரை பிரதமராக்கினால் ஐ.தே.க. தனித்து ஆட்சி அமைக்கும் அல்லது கூட்டு அரசு தொடரும் என்றும் தெரிகிறது.

இதேவேளை,

அரசில் எடுக்கப்படவுள்ள சில முக்கிய முடிவுகள் குறித்து ஜனாதிபதி நாளை புதன்கிழமை விசேட அறிவிப்பு ஒன்றை விடுக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கூட்டமைப்பின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யாழ்ப்பாணத்தில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனின் இல்லத்தில் இது தொடர்பான சந்திப்பு ஒன்று நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

வடக்கில் சகல உள்ளூராட்சி சபைகளில் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க முடியாத நிலை கூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் அந்தச்சபைகளை ஏனைய கட்சிகளுடன்சேர்ந்து முரண்பாடற்ற வகையில் எவ்வாறு நடத்திச் செல்வது என்பதுதொடர்பில்திட்டம்ஒன்றை வகுப்பது குறித்து நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

பொது அமைப்புகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், வர்த்தக சங்கம் முன்வைத்துள்ள ஆலோசனைகளுக்கு அமையவே இந்தத் திட்டம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகதமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடனும் பேசி ஒரு முடிவை எட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிய வருகிறது. (ஐ)

## சபைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சபைகளின் முதல் அமர்வு மார்ச் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலர் கமல் பத்மசிறி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முன்னதாக, புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளின் முதலாவது அமர்வு, பெப்ரவரி 15ஆம் திகதி நடைபெறும் என்று அரசிதழ் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

ஆனால், முதல் அமர்வு மார்ச் 2ஆம் திகதியே நடைபெறும். இது தொடர்பான புதிய அரசிதழ் அறிவிப்பு இன்று அல்லது நாளை வெளியிடப்படும்.

கடந்த வாரம் தேர்தல் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரியவுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

பெப்ரவரி 15ஆம் திகதி முதல் அமர்வை நடத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது. ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைகளினதும் உறுப்பினர்களின் பட்டியலைத் தயார் செய்வதற்கு நீண்ட காலஅவகாசம் தேவை.

நேரடியாக வட்டார ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் விபரங்கள் ஏற்கனவே தெரியவந்துள்ளது. ஆனால், விகிதாசார முறையில் கிடைத்துள்ள ஆசனங்களுக்கானதமது பிரதிநிதிகளின் பட்டியலை அரசியல் கட்சிகள் முன்மொழிய வேண்டும்.

இதனைக்கட்சிகளின்பொதுச் செயலர்கள் தான் செய்யவேண்டும். அதற்குக் குறிப்பிட்ட கால அவகாசம் தேவை.

இதனால், முதல் அமர்வை பெப்ரவரி 15ஆம் திகதி நடத்துவதற்குப் பதிலாக மார்ச் 2ஆம் திகதிக்குப் பிற்போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.– என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஒருபுறம் வடக்கு, கிழக்கில் அதன் அடித்தளத்தையே – அத்திபாரத்தையே – ஓர் உலுப்பு உலுப்பி விட்டன காங்கிரஸ், ஈ.பி.டி.பி. உட்பட மாற்றுக் கட்சிகள். ஏகபோகம் தகர்ந்துவிட்டது. ஏனைய கட்சிகளை மக்கள் ஆணை பெறாத வெற்று வேட்டுகள் என்று சம்பந்தனும் சுமந்திரனும் கூறி வந்த கூற்று இந்த மக்கள் தீர்ப்புடன் அடிபட்டுப் போய் விட்டது.

கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். தேர்தல் மாவட்டத்தில் ஆக வெறுமனே 15 ஆயிரம் வாக்குகள் எடுத்த சைக்கிளின் வாக்கு வங்கி, இம்முறை யாழ். மாவட்டத்தில் மட்டும் 65 ஆயிரமாக உயர்ந்துவிட்டது.

கடந்த பொதுத் தேர்தலில் 66 வீத வாக்குப் பெற்ற கூட்டமைப்பு இந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஆக 36 வீத வாக்குகளையே பெற்றிருக்கின்றது.

இதுதான் வடக்கு, கிழக்கில் பிரச்சினை என்றால், தெற்கில் – கொழும்பில் – பேரிடி காத்திருக்கின்றது.

நல்லாட்சி அரசு நொண்டத் தொடங்கிவிட்டது. புதிய அரசமைப்பு உருவாக்கமும், தீர்வு முயற்சியும் நிரந்தரமாகக் கிடப்பில் என்பது உறுதியாகிவிட்டது.

போதாக்குறை நல்லாட்சி அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சிஎந்நேரமும்வெளியேறலாம் என்ற செய்தியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேரடியாகவே – நேற்று முன்தினம் இரவு – தெரிவித்துவிட்டார் என்கின்றன கொழும்பு வட்டாரங்கள்.

நல்லாட்சி அரசிலிருந்து சு.க. வெளியேறினால் தமிழ்க் கூட்டமைப்புக்கு இரட்டைச் சிக்கல்.

முதலாவது, சு.க.எதிர்க்கட்சி வரிசைக்கு உத்தியோகபூர்வமாக வந்தால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி சம்பந்தனிடமிருந்து பறிபோய்விடும். அது சு.க.தரப்புக்கு உரியதாகிவிடும்.

இந்தப் பின்புலத்தில் நாடாளுமன்றத்தில் 106 ஆசனங்களை வைத்திருக்கும் ஐ.தே.க. தனித்து ஆட்சி அமைக்க முயலும். அப்படித்தனித்து ஆட்சியமைப்பதற்கு அறுதிப் பெரும்பான்மையான 113 எம்.பிக்களின் தேவைப் பாட்டை நிறைவு செய்வதற்கு 16 எம்.பிக்களைக் கொண்ட கூட்டமைப்பு தனக்கு உதவும் என்று பிரதமர் ரணில் எதிர்பார்க்கிறார்.

கூட்டமைப்பில் தனது கூசா தூக்கியாக இருப்பவர் கூட்டமைப்பின் ஆதரவை புதிய ஐ.தே.கட்சி அரசுக்கு பெற்றுத்தருவார் என்று ரணில் முழுமையாக நம்புகின்றாராம்.

இழக்கப்படும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற ஒரு பதவிக்கு நிவாரணமாகமூன்று பதவிகளை கூட்டமைப்புக்கு வழங்கவும் ரணில் தயாராம்.

அமையப் போகும் ஐ.தே.க. அரசில் கூட்டமைப்பு இணைந்தால் சபாநாயகர் பதவி, வெளிவிவகார அமைச்சர் பதவி, புனர்வாழ்வு – மீள்குடியேற்ற அமைச்சர் பதவி ஆகியனவே அவை மூன்றும்.

வெளியில் இருந்து ஐ.தே.க. அரசுக்கு ஆதரவு தந்தால் சபாநாயகர் பதவி மட்டும்தான் கூட்டமைப்புக்கு.

இந்தப்பேரம்பேசலை நடத்துவதற்காக கூட்டமைப்பில் தனது ஆள் கொழும்புக்கு வரும் வரை காத்திருக்கின்றார் பிரதமர் ரணில் என்கின்றன ஐ.தே.க. உள்வட்டாரங்கள்.

1965 இல் நடந்தது போல அரசுடன் கூட்டமைப்பு – தமிழரசு – இணைந்தால் தமிழரசின் மும்மூர்த்திகளுக்கு தகுந்த பதவி கிட்டிவிடும். பாவம் செல்வமும், சித்தரும்தான் உயர்வு கிட்டாமல் வாட வேண்டி நேரும்.

எது, எப்படியோ எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தன் இழந்தாலும் சபாநாயகர் பதவி கிட்டும் என்ற நம்பிக்கையுடன் அவர் இருக்கலாம் என்கின்றன அந்த வட்டாரங்கள்.

-மின்னல்-

## பொதுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சுமுகமாக்க இதுவே பொருத்தமான தீர்வு.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலில் தாமரை மொட்டுச் சின்னத்தில் முதன்முதலாக களமிறங்கிய மஹிந்த அணியான பொதுஜன பெரமுன 49 இலட்சத்து 41 ஆயிரத்து 952 வாக்குகளைப் பெற்று 239 சபைகளைத் தன்வசப்படுத்தியது. அந்தக் கட்சியில் போட்டியிட்டவர்களுள் 3 ஆயிரத்து 369 பேர் தெரிவாகியுள்ளனர்.

தேர்தல் வெற்றி தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை விடுப்பதற்காக பத்தரமுல்லை, நெலும் மாவத்தையில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்றுக் காலை விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை மஹிந்த நடத்தியிருந்தார். இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமக்கு 70 வீத வெற்றி கிடைத்தமையானது மகிழ்ச்சியளிக்கிறது. நாட்டைப் பிரிப்பது, அரச சொத்துகளை விற்பனை செய்வது, வரிச்சுமை, சலுகை இரத்து, அரசியல் பழிவாங்கல், இராணுவ அச்சுறுத்தல், சீரான பொருளாதாரக் கொள்கையின்மை ஆகிய அரசின் செயற்பாடுகளுக்கு எதிரானமக்களின் ஆணையாகவே நாம் இந்தத் தேர்தல் முடிவுகளைப் பார்க்கிறோம்.

மேலும், நாம் ஆட்சியிலிருக்கும் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தும் கடந்த சில வருடங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. நாட்டில் ஸ்திரமான பொருளாதாரக் கொள்கையொன்று இல்லாதமையால் மக்களும் நாளுக்குநாள் கடும் சிரமத்துக்கே முகம்கொடுத்து வருகிறார்கள். இவற்றுக்கான பதிலாகவும்தான் இன்று நாம் வெற்றி பெற்றுள்ளோம்.

ஜனாதிபதித் தேர்தலின் போது எம்மீது சேறுபூசி வெற்றி பெற்றதைபோல, இந்தத் தேர்தலிலும் வெற்றிபெற்றுவிடலாம் என்று அரசதரப்பினர் நினைத்தது தற்போது தலைகீழாகிவிட்டது.

அத்தோடு, இந்த நல்லாட்சி அரசை சூழ்ச்சி செய்து கவிழ்க்க வேண்டிய தேவை எமக்கில்லை என்பதைத் தாமரை மொட்டுச் சின்னத்துக்கான மக்களின் ஆதரவு நிரூபித்துள்ளதோடு, அரசைத் துரிதகதியில் கவிழ்க்க வேண்டும் என்ற சமிக்ஞையும் தற்போது தெளிவாகக் காண்பிக்கப்பட் டுள்ளது.

எனவே, மக்களின் இந்த ஆணையை அரசு ஏற்றுக் கொண்டு 2020ஆம் ஆண்டு வரை பார்த்துக்கொண்டிருக்காது, நாடாளுமன்றை உடனடியாகக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்லவேண்டும் என்றும் நாம் அரசை வலியுறுத்துகிறோம். – என்றார்.

இதன்போது, பொதுஜன பெரமுன பெரும்பான்மையான சபைகளைக் கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளமையால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நீங்கள் விலகுவீர்களா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு,

"நாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையை ஒருபோதும் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. மருதானை, டார்லி வீதியில் அமைந்துள்ள கட்டடத்துக்குள்ளும், அங்குள்ள பதாகைகளுக்குள்ளும் மட்டும் சுதந்திரக் கட்சி அடங்கிவிடாது.

கடந்த பொதுத் தேர்தலின் போது எனது தலைமையின் கீழ்தான் சுதந்திரக் கட்சிக்கு 96 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவானார்கள் என்பதையும் சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருக்கும் காலத்தில் அன்னம் சின்னத்தின்கீழ் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன களமிறங்கினார் என்பதையும், பொதுஜன பெரமுன என்பது கூட்டணியென்பதால் நான் சுதந்திரக் கட்சியிலிருந்து விலகவேண்டிய தேவையில்லை என்பதையும் இவ்வேளையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்" என்று மஹிந்த பதிலளித்தார். (ஐ)

## மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி ருக்கிடையே எதிர்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் இணக்கப்பாடுஎட்டப்பட்டுள்ளதாக ஊடகங்களில் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

ஆயினும் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளல் அல்லது அரசின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பில் அத்தகைய எதுவித தீர்மானங்களோ அல்லது இணக்கப்பாடோ எட்டப்படவில்லை என ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஒன்றிணைவுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி தமிழர்கள் என்ற ரீதியில் இணைந்து செயலாற்றுங்கள்.

இவ்வாறுதமிழ்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார் யாழ். ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் மிக நீண்ட காலத்தின் பின்னர் ஒரே நாளில் வன்முறைகள் அற்ற நிலையில் மிக அமைதியாக நடைபெற்று முடிந்துள்ளது. தொகுதி வாரித் தேர்தல்முறை 49 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒழிக்கப்பட்டு விகிதாசார கலப்பு முறைத் தேர்தல் நடைமுறைகளின்படி வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் முடிவுகள் ஒரு சில இடங்களைத் தவிர கட்சிகள் இணையவேண்டும் என்ற தேவையையே சுட்டிக்காட்டி நிற்கின்றன. இதுவே இன்றைய காலத்தின் தேவையுமாகும். ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்றஆன்றோர்வாக்குக்கு ஒப்ப தமிழ்மக்களின் இன்றைய நிலை – அவர்களின் அவசிய தேவைகள் – முன்னுரிமைகள் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு எல்லா வேறுபாடுகளையும் மறந்து தமிழர்கள் என்ற ரீதியில் இணைந்து செயலாற்றுங்கள் என சம்பந்தப்பட்ட அனைவரிடமும் தமிழ் மக்கள் பெயரால் வேண்டி நிற்கிறோம். – என்றுள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தமிழ் கட்சிகளினது பிரதிபலிப்பு என்ன?

**தமிழின எதிர்ப்பு நிலைப்பாடு தென்னிலங்கையில் முனைப்புற்றுள்ள இந்தச் சமயத்தில் தமிழர் தரப்புகள் ஒன்றிணைந்து செயற்படுவது மிக மிக முக்கியம் என்று இந்தப் பத்தியில் நேற்றுத் தெரிவித்திருந்தோம்.**

***"உள்ளூராட்சிச் சபைகளைத் தனித்து நிர்வகிக்க முடியாத தொங்கு அதிகார நிலைமை வந்துள்ள இச்சூழல், எதிரும் புதிருமான தமிழ்த் தரப்புகள் உள்ளூராட்சி நிர்வாகங்களுக்காகவேனும் ஒரு தளத்தில் - ஒரு மேடையில் - சந்தித்து இணங்கும் கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.***

***"அதன் மூலம் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை எதிர்கொள்வதற்கான தளத்திலும் அவை இணைந்து நிற்பதற்கான களச் சூழலை அது ஏற்படுத்தலாம்"*** **- இப்படி நேற்றுக் குறிப்பிட்டிருந்தோம்.**

**அது தொடர்பில் இரண்டு விதமான எதிர்வினைகள் நேற்றுக் கிடைத்தன.**

**ஒன்று - ஒரு மூத்த நிர்வாக அதிகாரியினுடையது. அரச சேவையில் முக்கிய நிர்வாகப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றவர்.**

***"உங்கள் ஆசிரியர் தலையங்க எதிர்பார்ப்பு அளவுக்கு மிஞ்சியது (Too much)"*** **என்றார் அவர்.**

***"ஒரு மாகாண சபையை, ஒரு கூட்டமைப்பாக இருந்து கொண்டே நடத்த முடியாமல் குழப்பியடித்தவர்கள் நம்மவர்கள். ஒரு கட்சியில் இருந்து கொண்டே வெட்டுக் குத்து என்று சபையை ரணகளப்படுத்தியமை குறித்து இப்போதும் சந்தி சிரிக்கின்றது. இந்தச் சீத்துவத்தில் எதிரும் புதிருமாக - கொள்கை ரீதியிலும், செயற்போக்கிலும் - முட்டி மோதிய கட்சிகளை, உள்ளூராட்சி நிர்வாக விடயத்தில் ஒரு கட்சியின் ஆட்சிக்கு மற்றக் கட்சியை உதவும்படி கோருவது அதிகப்படியான எதிர்பார்ப்பு. நடக்கவே வாய்ப்பு இல்லாதது"*** **- என்றார் அவர்.**

**அதேசமயம், மற்றொரு பக்கத்திலிருந்தும் எதிர்வினை பொதுவாக வெளிப்பட்டிருக்கின்றது.**

**தமிழின நன்மை நோக்கி ஒன்றுபடுங்கள் என்று தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை நோக்கி வடக்கு, கிழக்கு சமூகப் பிரமுகர்கள் பலர் ஒன்றுபட்டு கோரிக்கை முன்வைத்திருக்கின்றார்கள்.**

**நாம் நேற்று இப்பத்தியில் கோரிய விடயத்தை அகில இலங்கை கம்பன் கழகம் முக்கிய விடயமாக முன்னெடுத்து வடக்கு, கிழக்கு சமூகப் பிரமுகர்களை ஒன்றிணைத்து இந்தக் கோரிக்கையை நகர்த்தி வருகின்றது. வரும் தினங்களில் இந்தக் கோரிக்கையை ஒன்றுபட்டு முன்வைக்கும் சமூகப் பிரமுகர்களின் எண்ணிக்கையும் பட்டியல் கனதியும் அதிகரிக்கும் என நம்பலாம்.**

**இதேபோன்ற கோரிக்கையை சமூகப் பொறுப்புணர்ந்து தாமாகவே முன்வந்து யாழ். ஆயர் வண.கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசமும் பகிரங்கமாக வெளியிட்டிருக்கின்றார்.**

***"போர் முடிந்த பின்னர் கடந்த எட்டு வருடங்களில் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தம்முள் பகை வளர்த்துக் கொண்டு மேலும் பிளவுபட்டனவேயன்றி தமிழினத்தின் நன்மை நோக்கி ஒருமைப்பாட்டுடன் ஓரடியைத் தன்னும் எடுத்து வைக்காதமை கண்டு நம் மக்கள் மிகவும் மனவருந்தி நிற்கின்றனர்.***

***"போருக்குப் பின்னான இக்குறுகிய காலத்தில் ஏற்பட்டதான பகையும் பதவி மோகமும் தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையைச் சிதைத்தமையை அனைவரும் கவனித்தனர்.***

***"... அனைவரும் இறங்கிவர முன் வந்திருக்கும் இந்நிலையில் பழையவற்றைக் கிளறாமல் இன நன்மை நோக்கி நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து ஒரே குரலாக இனியேனும் பேச முன்வரவேண்டும்."*** **- என்ற சமூகப் பிரமுகர்களின் கோரிக்கையில் நியாயம் இருப்பதாகவே கருதுகிறோம்.**

**வெறுமனே ஓர் உள்ளூராட்சிச் சபையைக் குழப்பமின்றி நிர்வகிப்பதற்கு மட்டும் இணக்கம் காண்பதுடன் விடயங்கள் முடிந்து விடக்கூடா.**

**அதையும் தாண்டி, ஈழத் தமிழர்கள் இப்போது எதிர்கொள்ளவிருக்கும் மோசமான நெருக்கடிகளுக்கு ஒன்றுபட்டு முகம் கொடுக்கும் விதத்தில் அந்த ஒற்றுமை எழ வேண்டும்.**

**தென்னிலங்கையில் பேரினவாத சக்திகள் வீறுகொண்டு எழும் இந்தச் சூழலில், அந்தச் சக்திகளுக்குத் துணை போகும் கோடரிக் காம்புகளாக தமிழர் தரப்புக்கள் தொடர்ந்தும் மாறிவிடாமல் இருப்பதற்காகவேனும் அத் தமிழர் தரப்புகளை, தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் ஈர்த்துத் தமது அணியில் வைத்திருக்க வேண்டியமை காலத்தின் தேவையாக வந்துள்ளது.**

**அவர் 'துரோகி', இவர் 'காட்டிக் கொடுத்தவர்', அவர் 'உளவாளி' என்ற பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களைத் தூக்கிக் குப்பைக் கூடைக்குள் போட்டுவிட்டு, தமிழ்ச் சமூகமாக ஒன்றுபட்டு எழுவதற்கு நாம் ஏதாவது செய்தாக வேண்டும்.**

**சமூகப் பிரமுகர்களின் இந்தப் பகிரங்கக் கோரிக்கைக்கு - வேண்டுகோளுக்கு - ஒவ்வொரு தமிழ்க் கட்சியும் தனது பிரதிபலிப்பைப் பகிரங்கமாக வெளிப்படுத்துவது அரசியல் கடமையும், பொறுப்பும் என்றும் நினைக்கின்றோம். அதனைச் சுட்டிக் காட்டுவது நமது சமூகக் கடமை என்று கருதுகின்றோம்.**

---

### உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள்

# ஏக பிரதிநிதித்துவத்தின் மறுவாசிப்பாகும்!

## வட மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 13

நடைபெற்று முடிந்திருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முடிவுகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதித்துவத்தின் மீதான மறுவாசிப்பாக அமைந்துள்ளது.

இந்த நிலையில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான உறுப்பினர்களாக மக்களால் வெற்றி பெறச் செய்யப்பட்ட வர்கள் ஊழலற்ற, நேர்மையான சேவையை எமது மக்களுக்கு வழங்க முன்வரவேண்டும் என வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கைத் தேர்தல் வரலாற்றில் தமிழர்களின் வகிபாகமானது ஆட்சி- அதிகாரங்களை நோக்கியதாக இருந்ததில்லை என்பதுடன், எமது இனத்தின் உரிமை சார்ந்தே இருந்து வந்துள்ளது என்பதனை மீண்டுமொரு தடவை இடித்துரைப்பதாக இந்தத் தேர்தல் முடிவுகளும் அமைந்துள்ளன.

இந்தப் பின்னணியில், வடக்கு, கிழக்கில் உள்ள சபைகளில் தனித்து ஆட்சி அமைக்கும் வகையிலான பெரும்பான்மைப் பலம் எந்தவொரு தமிழ்க் கட்சிக்கும் கிடைக்காத திரிசங்கு நிலையை தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தியுள்ளன.

இதுவரை காலமும் தமிழ் மக்கள் நம்பியிருந்த தமிழ்த் தலைமைகள் மீதான நம்பிக்கையீனமும் தற்போது நம்பியிருக்கும் தலைமையின் மௌனமுமே இவ்வாறு இரண்டும்கெட்டான் நிலைக்கு காரணமாகும்.

இதன் காரணமாக பெரும்பாலான சபைகளில் ஆட்சியமைப்பதில் பெரும் இழுபறி நிலையேற்பட்டுள்ளது. இது தான் யதார்த்தபூர்வமான உண்மையாகும். அதை விடுத்து வேறு அர்த்தப்படுத் தல்களை முன்னிறுத்தி காலத்தை வீணடிக்காது மக்கள் நலனை முன்னிறுத்தியதான முடிவுகளை சம்பந்தப்பட்டவர்கள் விரைந்து எடுக்க வேண்டும்.

எது எப்படி இருந்தாலும் வாக்களித்த மக்கள் அனைவரும் தமிழர்களே. அவர்களை முறையாக வழிநடத்தி நேர்வழியில் ஒன்றிணைக்காமை தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களின் தவறாகும்.

ஆகவே, மாற்றுத் தலைமையை ஏற்றுக்கொண்டவர்கள், ஏற்றுக்கொள்ளாதவர்கள் என்ற கண்ணோட்டத்தில் மக்களைப் பழிவாங்கும் விதமாக செயற்படாது பக்கசார்பற்று சேவையாற்ற அனைவரும் முன்வரவேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களினூடான அபிவிருத்திப் பணிகளைச் செவ்வனே செய்து எமது தேசத்தின் அடிப்படைக் கட்டுமானத்தை மேம்படுத்தும் விதத்தில் கட்சி, அரசியல் வேறுபாடுகள் கடந்து, கொள்கை வழி நின்று அனைவரும் சேவையாற்றுவதே வாக்களித்த எமது மக்களுக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

இவ்வேளையில், பெரும் அரசியல் குழப்ப நிலைக்கு வித்திடுவதாக தென்னிலங்கை தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன. அதன் அடிப்படையில், இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக் குற்றங்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இலங்கை இராணுத்தினரால் வல்வளைப்பு செய்யப்பட்டிருக்கும் நிலங்களின் விடுவிப்பு போன்ற விடயங்களுகான பொறுப்புக் கூறல் கடப்பாட்டில் இருந்து தம்மை விடுவிக்கும் முனைப்பில் இந்த நல்லாட்சி அரசு கவனம் செலுத்தும் அபாயம் உள்ளது.

இதனை முறியடித்து தமிழர்களுக்கு உரிய நீதியை பெற்றுக்கொள்வதற்கும் தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை உள்ளடக்கியதான நிரந்தரத் தீர்வை அடைய வேண்டுமாயின் தமிழர் தரப்பின் ஒற்றுமை அவசியமாகும்.

தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்பட்ட நீதிக்கு சமனானது என்ற அடிப்படையில் எமக்கான நீதி, பிராந்திய உலக வல்லாதிக்க நாடுகளின் அரசியல், பொருளாதார நலன்களின் அடிப்படையில் தொடர்ந்தும் தாமதிக்கப்பட்டு மறுக்கப்படும் ஏதுநிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றுபட்டே ஆகவேண்டியது காலத்தின் கட்டாயமாகுமென்பதனை தமிழ் மக்கள் தமது தீர்ப்பின் மூலம் வலியுறுத்தியுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

(க)

---

# சிவராத்திரி விரதம் தீய எண்ணங்கள் எனும் இருளை நீக்கி நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்த உதவுகின்றது!

## சிவராத்திரி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 12

சிவராத்திரி விரதம் தீய எண்ணங்கள் எனும் இருளை நீக்கி நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்த உதவுகின்றது என சிவராத்திரி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

மனதால் உயர்ந்தவனே மனிதனாகிறான். அதனால், மனிதப் பிறவி என்பது அரிதானதும் உயர்வானதும் ஆகும். மனித மனதை நல்வழிப்படுத்தி, மனிதன் வாழ்வாங்கு வாழ வழிகோலுபவை சமயங்களே. சமயம் சார்ந்த பண்டிகைகளும் விரதங்களும் அவற்றுள் முதன்மை பெறுகின்றன.

அந்தவகையில் உலகெங்கும் வாழும் சைவ மக்களால் மிகுந்த பக்தி சிரத்தையோடு அனுஷ்டிக்கப்படும் மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஐம்பொறிகளின் வழியே மனதை அலையவிடாது அதனை ஐக்கியப்படுத்தி, இறைசிந்தனையுடன் சைவ மக்களால் அனுஷ்டிக்கப்படும் விரதங்களுள் மகா சிவராத்திரி விரதம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்த சிவ வழிபாடானது, நான் எனும் அகந்தையையும் தான் எனும் மமதையையும் இல்லாதொழிப்பதன் மூலமே உயர்வினை அடையலாம் என்பதை எடுத்துக்காட்டுவதோடு, மகா சிவராத்திரி விரதமானது, மனித மனங்களில் உள்ள தீய எண்ணங்கள் எனும் இருளை நீக்கி அமைதி எனும் ஞான ஒளியைக் குடிகொள்ளச் செய்து மனிதர்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்த உதவுகின்றது.

மானிட சமூகத்தினை நல்வழிப்படுத்தும் சமய நம்பிக்கையையும் சமூக விழுமியப் பண்புகளையும் மேன் மேலும் மக்களிடையே வேரூன்றச் செய்யும் மகாசிவராத்திரி தினத்தைக் கொண்டாடும் சைவ மக்களுக்கு எனது பக்திபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

---

### நாளை

**14.02.2018**
**புதன்கிழமை**

நட்சத்திரம் : திருவோணம் முழுவதும்
திதி : சதுர்த்தசி பி.இ. 1.38 வரை
சுபநேரம்: 5.03 – 6.33 வரை
இராகுகாலம்: 12.33 – 2.03 வரை

# மஹிந்த வெற்றியை தேசிய வெற்றியாகக் கருதி இனித் தமிழர்களையும் அணைக்க வேண்டும்

## இனி புதிய கொள்கையை அவர் முன்னெடுக்கவேண்டும் என்கிறார் மனோ

தனது வெற்றியை இலங்கையின் தேசிய வெற்றியாகக் கருதி, தமிழ் மக்களையும் அரவணைக்கும் புதிய கொள்கையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுக்க வேண்டும் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு இந்துக் கல்லூரியில் நேற்றுக் காலை நடைபெற்ற கல்லூரி ஸ்தாபகர் விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல் வெற்றியின் மூலம் மஹிந்த மீண்டும் எழுந்து வந்துள்ளார். அவரது வெற்றி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுக்கப்பட்டுள்ள கடும் சிவப்பு எச்சரிக்கை.

2015ஆம் ஆண்டு கிடைத்த மக்கள் ஆணையைப் புரிந்து கொண்டு நடைமுறைப் படுத்தத் தவறிவிட்டு, ஜனாதி பதியும், பிரதமரும் ஒருவருக்கு எதிராக இன்னொருவர் ஒரே அரசுக்கு உள்ளேயே கட்சி அரசியல் செய்ய முயன்றதன் பிரதிபலனே இதுவாகும்.

மஹிந்தவின் வாக்குகள், மஹிந்த ஆதரவு வாக்குகள் என்பதைவிட, இந்த அரசுக்கு எதிரான பெரும்பான்மை ஆட்சேபனை வாக்குகள் என்பதை இவர்கள் இருவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள முயல வேண்டும்.




மனோ கணேசன் தெரிவிப்பு

அதேபோல் ஒரேநாட்டுக்குள் வாழும் தீர்மானத்துக்கு வந்து விட்ட தமிழ் அரசியல் தலைவர்களும், மஹிந்தவின் இன்றைய மீள்வருகையை கணக்கில் எடுக்க முன்வரவேண்டும். ஒன்றுமே நிகழாதது போல நாம் இனியும் இருக்க முடியாது. தமிழர்கள் விரும்பினாலும். விரும்பாவிட்டாலும் கூட,

இதுதான் பெரும்பான்மை சிங்கள மக்களின் இன்றைய தீர்ப்பு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இம்முறை மஹிந்த அணிக்கு வாக்களித்தவர்களில் பெரும்பாமையோர் சிங்கள பௌத்த வாக்காளர்களே.

எனினும், 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றியை தமிழ் மக்களுக்கும், பின் முஸ்லிம் மக்களுக்கும் எதிரான வெற்றியாக எண்ணி செயற்பட்டு, தமிழ் பேசும் மக்களை அந்நியப்படுத்திக் கொண்டதை போல், இந்த வெற்றியையும் சிங்கள பௌத்த எழுச்சி என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அணியினர் அர்த்தம் கொள்ளக்கூடாது.

தனது வெற்றியை இலங்கையின் தேசிய வெற்றியாக கருதி, தமிழ் மக்களையும் அரவணைக்கும் புதிய கொள்கையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னெடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (க)

## 35 கோடி ரூபா செலவில் மீன்பிடித்துறை காலியில்!



கொழும்பு, பெப். 13

காலி மாவட்டத்தின் ரத்கம பெரலிய கடற்கரையில், கடற்றொழில், நீரியல்வள அமைச்சினால் 35 கோடி ரூபா செலவில், மீன்பிடித்துறை அமைக்கப்படவுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் கட்டுமானப் பணிகள் பூர்த்தியானதும் பிரதேச மீனவர்கள் பிரச்சினைகள் இன்றி தொழிலுக்காக கடலுக்குப் புறப்பட்டுச் செல்ல வாய்ப்புக் கிடைக்குமென்று கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இலங்கையின் மீன்பிடித் துறையானது சிறந்த வளர்ச்சியை பதிவு செய்து வருவதுடன் மீன்பிடி உற்பத்திகளுக்கு தற்போது இரட்டிப்புக் கேள்வியும் நிலவுவதுடன், இலங்கையின் மீன்பிடி ஏற்றுமதி கடந்த ஆண்டு உயர்வடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தேர்தலில் தெரிவான உறுப்பினர்களின் பெயர் விவரங்களுடன் கூடிய வர்த்தமானி

### விரைவில் வெளியிடப்படும்

கடந்த 10 ம் திகதி நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், தெரிவான உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவிப்பினை, கூடிய விரைவில் வெளியிடுவதற்கு தேர்தல் ஆணைக்குழு எதிர்பார்த்திருப்பதாக ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கட்சிப் பட்டியலில் இடம்பெற்றுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின், பெயர்களை கட்சி செயலாளர்கள் அனுப்பி வைக்கும் பட்சத்தில் இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிடக்கூடியதாக இருக்கும்.

இதேவேளை, தேர்தல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களை ஸ்தாபிப்பதற்கு வர்த்தமானி அறிவிப்பை வெளியிடுவதில் மாகாணசபைகள் உள்ளூராட்சிமன்ற அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவிப்பை மார்ச் மாதம் முதல் வாரத்தில் வெளியிடக் கூடிய தாக இருக்கும் என்று மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் கமல் பத்மஸ்ரீ தெரிவித்துள்ளார்.

மேலும், ஆணைக்குழுவிடம் இருந்து கிடைக்கப்பெறும் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சிமன்றங்களின் பிரதிநிதிகளின் வர்த்தமானி அறிவிப்பின் பின்னரே இது வெளியிடப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

## அர்ஜுன் அலோசியஸ், பலிசேனா மற்றும் கசுனிடம் விசாரணை நடத்த நீதிமன்றம் அனுமதி இன்று முதல்

கொழும்பு, பெப். 13

பிணைமுறி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேனவிடம் விசாரணை நடத்த சீ.ஐ.டி.யினருக்கு நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்துள்ளது.

மத்திய வங்கியின் பிணை முறிகள் மோசடி தொடர்பாக பெர்பெச்வல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் கசுன் பலிசேன ஆகியோர் அண்மையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

இந்நிலையில் அவர்களுக்கு எதிராக கொழும்பு கோட்டை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு தொடர்பாக அவர்களின் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள அனுமதியளிக்குமாறு குற்றப் புலனாய்வுத்திணைக்களம் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

அதனை ஏற்றுக் கொண்ட கோட்டை மாஜிஸ்திரேட் லங்கா ஜயரத்ன, இன்றுமுதல் 15 ஆம் திகதி வரை சந்தேக நபர்களிடம் வாக்கு மூலம் பெற்றுக்கொள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதியளித்துள்ளார்.

அதுதொடர்பாக சிறைச்சாலை அத்தியட்சகருக்கும் எழுத்து மூல உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## நாமலுக்கு விதிக்கப்பட்ட தடை தற்காலிகமாக நீக்கப்பட்டது

கொழும்பு, பெப். 13

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

கொழும்பு – கோட்டை நீதிவானின் உத்தரவுக்கு அமைய இந்தத் தடை நீக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் இளைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாநாடு மற்றும் ரஷ்யாவில் நடைபெறவுள்ள இளைஞர் மாநாடு ஆகியவற்றில் கலந்து கொள்வதற்காக, நாமல் ராஜபக்ஷவுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை தற்காலிகமாக



நீக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் கிரிஷ் நிறுவனத்துடனான கொடுக்கல், வாங்கல் தொடர்பான வழக்கில் நாமல் ராஜபக்ஷ வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பின்னடைவை ஏற்றுக் கொள்கிறோம்: ஐ.தே.க. பொதுச் செயலர் தெரிவிப்பு!

கொழும்பு, பெப். 13

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமது கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவை ஏற்றுக் கொள்றோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

மக்களின் கருத்தையும் ஆணையையும் தமது கட்சி முழுமையாக ஏற்றுக்கொள்கிறது. என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்–

இந்த முடிவுகள் தமது கட்சிக்கு ஓர் எச்சரிக்கை. கட்சியில் உள்ள குறைபாடுகளை ஆராய்ந்து திருத்தமான, துரிதமான பயண மொன்றை தமது கட்சி முன்னெடுக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்னெடுக்கப்பட்ட பல சேவைகள் பலருக்கு இதுவரை தென்படவில்லை. இந்தச் சேவைகளின் நன்மைகள் விரைவில் பொதுமக்களைப் போய்ச் சேரும்.



வெற்றி கொள்ளப்படாத மற்றும் தாமதமான கருமங்களையும் மாற்றியமைத்து வெற்றியை நோக்கிச் செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் படும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் பக்கச்சார்பின்றி சேவையாற்ற வேண்டும்



மட்டு. அரச அதிபர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,பெப்.13

தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் தேவைகளை உணர்ந்து தூய்மையான வகையிலும் பக்கச்சார் பற்ற வகையிலும் மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியுமான எம்.உதயகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த உள்ளூராட்சி தேர்தலுக்கான பிரதான அலுவலகத்தின் செயற்பாடுகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் சுமுகமான முறையில் நடைபெற்று முடிந்துள்ளது.புதிய முறையில் நடைபெற்ற இந்த தேர்தலை உத்தியோகத்தர்களும் பாதுகாப்பு தரப்பினரும் சிறப்பான முறையில் எதிர்கொண்டு நடத்தி முடித்துள்ளனர்.

உள்ளூராட்சிமன்றங்களுக்கான பிரதிபலன்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்தத் தேர்தலை சுமுகமாக நடத்துவதற்குப் பலர் பல வழிகளிலும் உதவியிருந்தனர். 4ஆயிரத்து 443 உத்தியோகத்தர்கள் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ஆயிரத்து 900 பொலிஸாரும் பாதுகாப்பு கடமைகளுக்கு அழைக்கப்பட்டிருந்தமையுடன் விசேட அதிரடிப்படையினரும் முப்படையினரும் பாதுகாப்பு பணிகளை முன்னெடுத்திருந்தனர்.

இம்முறை மக்கள் அதிக ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தனர். விசேடமாக ஊடகவியலாளர்கள் தேர்தல் தொடர்பான அறிவுறுத்தல்களை மக்கள் மத்தியில் கொண்டு சென்று அவர்களை அறிவூட்டியதுடன் சுமுகமான முறையில் வாக்களிக்க தூண்டியதற்காகவும் ஊடகவியலாளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோன்று எமது செயற்பாடுகளுக்கு பூரண ஆதரவு வழங்கிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள்,செயலாளர்கள், சுயேச்சைக் குழு ஆகியவற்றுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று தெரிவித்துள்ளார்.

# மஹிந்த ராஜபக்ஷவைச் சுற்றி நாடு அணி திரண்டுள்ளது

## கருணா அம்மான் மகிழ்ச்சி

மட்டக்களப்பு,பெப்.13

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சுற்றி ஒட்டுமொத்த நாடும் அணி திரண்டுள்ளது என முன்னாள் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். பிணை முறி மோசடிகளுடன் தொடர்புடைய கள்வர்களை விரட்டியடிப்பதற்கு மக்கள் சரியான தீர்மானத்தை வழங்கியுள்ளனர்.



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சுற்றி ஒட்டுமொத்த நாட்டு மக்களும் இணைந்து கொண்டுள்ளனர். முழுநாட்டிலும்தாமரை மலர் பூத்துள்ளது.

நான் இதற்கு முன்னரும் கூறியிருந்தேன் மஹிந்த தலைமையிலான மலர் மொட்டு வெற்றியீட்டும் என, அது இன்று நிரூபணமாகியுள்ளது. இம்முறை மக்கள் கள்வர்களை பிடித்து வெளியேற்ற வேண்டுமென மக்கள் ஆர்வம் காட்டியிருந்தனர்.நாட்டின் அபிவிருத்திப் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. மக்கள் சரியான பாடத்தை இந்த அரசாங்கத்திற்கு புகட்டியுள்ளனர்.

மட்டக்களப்பு மக்களும் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொண்டுள்ளனர்.மஹிந்த ஐயாவிற்கு, நல்லாட்சி அரசாங்கம் எத்தனை கஷ்டங்களை வழங்கியிருந்தது. சேறு பூசியிருந்தது. படைவீரர்களின் ஆதரவும் மஹிந்த ராஜபக்ஷவிற்கே உண்டு எனக் கருணா தெரிவித்துள்ளார்.

# கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை!

மட்டக்களப்பு,பெப்.13

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை முனைக்காட்டுப்பகுதியில் வாவியை அண்டிய சதுப்பு நிலப் பகுதியில் திருட்டுத்தனமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று பொதுமக்களாலும் காவல் துறையினராலும் முற்றுகையிடப் பட்டுள்ளது.



சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக இது போன்ற முற்றுகை இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில் உற்பத்திக்கு பயன்படும் பொருள்கள் மாத்திரம் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ப)

### திருக்கோவில் பிரதேச சபை தேர்தல்:

# தமிழ்க் கூட்டமைப்பு பெரும் திண்டாட்டம்; ஏனைய கட்சிகள் கூட்டணிக்கு முஸ்தீபு!

திருக்கோவில் பிரதேச சபை ஆட்சி அமைப்பதில் த.தே.கூட்டமைப்பு திண்டாட்டம் ஏனைய கட்சிகள் கூட்டணிக்கான முயற்சியில் இறங்கியுள்ளன.



நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனது பலத்தை இழந்திருக்கும் நிலையில் ஏனைய கட்சிகளின் ஆதரவுடனே தமிழ் பிரதேச சபையின் ஆட்சியை அமைக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கோட்டையாகக் கருதப்படும் திருக்கோவில் பிரதேச சபையின் ஆட்சியைத் தனித்து அமைக்க முடியாத நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு திண்டாடிக் கொண்டு இருக்கும் நிலையில் ஏனைய கட்சிகள் கூட்டணியமைத்து ஆட்சி அமைக்கும் நோக்கில் மந்திராலோசனைகளில் ஈடுபட்டு வருகின்றன.

திருக்கோவில் பிரதேசத்தில் 8ஆசனங்களை இலங்கைத் தமிழரசு கட்சி கைப்பற்றியுள்ளதுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 3 ஆசனங்களையும், ஐக்கிய தேசிய கட்சியினர் 2ஆசனங்களையும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஓர் ஆசனத்தையும், உதயசூரியன் ஒரு ஆசனத்தையும் கைப்பற்றிய அதேவேளை சுமார் 35 வருடங்களுக்கு பின்னர் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி தனது வீணைச் சின்னத்தில் களமிறங்கியதோடு, 2 ஆசனங்களையும் கைப்பற்றி இருப்பது குறிப்பிடத்தக்கது. (ப)

### அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம் முன்

# தவத்தைக் கைது செய்யக் கோரி நேற்றுமுன்தினம் இரவு ஆர்ப்பாட்டம்

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஏ.எல். தவத்தைக் கைது செய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டமொன்று பிரதேச சபையில் நடத்தப்பட்டுள்ளது.



தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ஏ.எல். தவத்தை கைதுசெய்யுமாறு கோரி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

தேசிய காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்கள் சிலரால் இந்த கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.





கொழும்பு மாநகர சபை:

# மனோவுக்கு 10 ஆசனங்கள்!

கொழும்பு, பெப்.13

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட மனோ கணேசன் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி, 10 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் அரசின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான மனோ கணேசன் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஏணிச் சின்னத்தில் தனித்துப் போட்டியிட்டிருந்தது.

இந்தத் தேர்தலில், அந்தக் கட்சிக்கு 27,168 வாக்குகள் கிடைத்ததன் மூலம், 10 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

எனினும், 110 உறுப்பினர்களைக் கொண்ட கொழும்பு மாநகரசபையில், ஐ.தே.க. 60 ஆசனங்களைக் கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

23 ஆசனங்களுடன், சிறிலங்கா பொதுஜன முன்னணி இரண்டாவது இடத்திலும், 12 ஆசனங்களுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மூன்றாவது இடத்திலும் உள்ளன.

10 ஆசனங்களுடன் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி நான்காமிடத்திலும், 6 ஆசனங்களுடன் ஜே.வி.பி. ஐந்தாமிடத்திலும் இருக்கின்றன.

# முதல் பெண் மேயராக பதவியேற்கும் ரோஸி!

கொழும்பு, பெப். 13

கொழும்பு மாநகரசபையின் முதல் பெண் மேயராக ரோஸி சேனநாயக்க பதவியேற்கவுள்ளார்.

கொழும்பு மாநகரசபைக் கான தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி 1 இலட்சத்து 31 ஆயிரத்து 353 வாக்குகளைப் பெற்று 60 ஆசனங்களை தன்வசப்படுத்தியுள்ளது.

110 உறுப்பினர்களைக் கொண்ட கொழும்பு மாநகரசபையில் 60 உறுப்பினர்களை ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுள்ளமையால் தனித்து ஆட்சி அமைக்கக் கூடிய நிலைமை உருவாகியிருக்கின்றது.

ஆனால், ரோஸி சேனநாயக்கவை மேயராகக் கொண்ட நிர்வாகம் அமைக்கப்பட வுள்ளது.

இந்தத் தேர்தலில் பொது ஜன பெரமுன 60 ஆயிரத்து 87 வாக்குகளைப் பெற்று 23 உறுப்பினர்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 31 ஆயிரத்து 421 வாக்குகளைப் பெற்று 12 உறுப்பினர்களையும் பெற்றுள்ளன.

அமைச்சர் மனோ கணேசன் தலைமையிலான ஒருங்கிணைந்த முற்போக்குக் கூட்டணி 27 ஆயிரத்து 168 வாக்குகளைப் பெற்று 10 உறுப்பினர்களை தன்வசப்படுத்தியுள்ளது.

இதில் தொகுதி ரீதியாக வெள்ளவத்தை, பாமன்கடை மேற்கு தொகுதியில் போட்டியிட்ட பி. பாஸ்கரா வெற்றி பெற்றுள்ளார். மேயர் வேட்பாளராக போட்டியிட்ட சண் குகவரதன் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்துள்ளார்.

இருந்தபோதிலும் விகிதாசாரப் பட்டியல் அடிப்படையில் 9 ஆசனங்களைப் பெற்று மொத்தமாக 10 உறுப் பினர்களை முற்போக்குக் கூட்டணிதனதாக்கிக்கொண்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி 14 ஆயிரத்து 234 வாக்கு களைப் பெற்று 6 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. நவோதய மக்கள் முன்னணியின் தலைவர் எஸ். கே. கிருஷ்ணா தலைமையில் போட்டியிட்ட சுயேச்சைக்குழு 2 ஆனது 4833 வாக்குக்களைப் பெற்று 2 உறுப்பினர்களைப் பெற்றுள்ளது.



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிட்ட ஜனநாயக மக்கள் காங்கிரஸ் அணி 2853 வாக்குகளைப் பெற்று ஒரு ஆசனத்தையும் இலங்கைத் தேசிய சக்தி 3251 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி 2771 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும் ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி 1380 வாக்கு களைப் பெற்று ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியில் கொட்டாஞ்சேனையில் போட்டியிட்ட மேல் மாகாண சபை உறுப்பினர் ராமின் புதல்வரான ஜோன் ராம் வெற்றி பெற்றுள்ளார். இதேபோன்று காயத்திரி விக்கிரமசிங்க வெற்றிவாகை சூடியுள்ளார். வெள்ளவத்தையில் போட்டியிட்ட திருமதி அமிர்தாம்பிகை கோபாலன், பிரணவன் ஆகியோரும் வெற்றிபெற்றுள்ளனர்.

பாமன்கடை மேற்குத் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட்ட ஊடகவியலாளர் உமாசந்திர பிரகாஷ், ஜன நாயக மக்கள் காங்கிரஸின் செயலாளரும் முன்னாள் மாகாணசபை உறுப்பினருமான நல்லையா குமரகுருபரன் ஆகியோர் தோல்வியைத் தழுவியுள்ளனர்.

இந்தத் தொகுதியிலேயே ஒரு மித்த முற்போக்குக் கூட்டணியில் வேட்பாளராகப் போட்டியிட்ட பாஸ்கரா வெற்றி பெற்றுள்ளார்.

# அரசு உடனடியாக பதவி விலக வேண்டும்!

## தினேஷ் குணவர்தன கூறுகிறார்

கொழும்பு, பெப். 13

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன 340 உள்ளூராட்சி சபைகளில் 239 சபைகளின் அதிகாரத்தைக் கைப்பற்றி 19 மாவட்டங்களில் அபார வெற்றியை அடைந்துள்ளது. இதன் மூலம் அரசுக்கு மக்கள் ஆதரவு இல்லாது போயுள்ளது என கூட்டு எதிர்க்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகளின் பின்னர் கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு பத்தரமுல்லநெலும்மாவத்தையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

இந்த வெற்றியானது வர லாறு காணாத வெற்றியாகும். இதனை அரசின் கடந்த 3 வருட ஆட்சி தொடர்பான மக்கள் கருத்துக் கணிப்பாகவே நாம் நோக்குகின்றோம்.



இதன் மூலம் அரசுக்கான மக்கள் ஆதரவு இல்லாது போயுள்ளது. ஆகவே அரசு உடனடியாக பதவி விலக வேண்டும் எனவும் அவர் பகிரங்க அறிவித்தல் விடுத்துள்ளார்.

ஐ.தே.க. முன்னோக்கிச் செல்ல


# கட்சியின் பொறுப்பை சஜித் ஏற்றுக்கொள்ள வேண்டும்

ஐ.தே.க. முன்னோக்கிச்செல்ல சஜித் கட்சியைப் பொறுப்பேற்க வேண்டும். தற்போதைய தலைவர்கள் பொறுப்பிலிருந்து வெளியேற வேண்டும்.

எனவே, ஐக்கிய தேசியக் கட்சி முன்னோக்கிச்செல்வதற்கு கட்சியின் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாச கட்சிப் பொறுப்புக்களை ஏற்க வேண்டும் என அந்தக் கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் ஸ்ரீநாத் பெரேரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

சஜித் பிரேமதாச மற்றும் நவீன் திசாநாயக்க ஆகியோர் கட்சித் தலைமையை ஏற்று வழிநடத்த வேண்டும் .



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் மலிக் சமரவிக்ரம, ரவி கருணாநாயக்க போன்றவர்கள் கட்சிப் பொறுப்புக்களில் இருந்து வெளியேற வேண்டும் என ஸ்ரீநாத் பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

# தேயிலையின் விலை அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 13

கொழும்பு தேயிலை ஏல விற்பனையின் ஒரு கிலோ தேயிலையின் விலை சராசரியாக 640 ரூபாவை எட்டியிருந்தது என தரகு நிறுவனம் ஒன்று அறிவித்துள்ளது.

கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் இது 43 சதவீதத் திற்கு மேலான வளர்ச்சி என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

உயர் ரகத் தேயிலைக்கு ஏற்பட்ட கிராக்கி காரணமாக மலைநாட்டு மற்றும் தாழ்நில உற்பத்திகளின் விலை மட்டங்களும் உயர்ந்ததாக அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

# வீடமைப்புத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட பொகவந்தலாவ மக்கள் போராட்டம்

கொழும்பு, பெப். 13

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் கீழ் பிரிவு தோட்டமக்கள் நேற்றுக் காலை 8 மணியில் இருந்து 9 மணி வரை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர் .

பொகவந்தலாவ கெர்க்கஸ் வோல்ட் மத்திய பிரிவு தோட்டப் பகுதியில் முன்னெடுக்கப்படுகின்ற வீடமைப்புத் திட்டத்தினால் பெக்கோ இயந்திரம் கொண்டு வெட்டப் பட்டு குவிக்கப்பட்ட மண் மழை காலங்களில் கரைந்து கெர்க்கஸ்வோல்ட் கீழ் பிரிவு தோட்ட மக்கள் குடிதண்ணீருக்காகப் பயன்படுத்தும் தண்ணீரில் கலக்கப்படுகிறது என்றும், இதனால் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.



அத்தோடு, இந்த நீரைக் கொண்டு அன்றாடம் தமது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியவில்லை எனவும் கடந்த 50 வருடங்களாக இந்த நீரைப் பயன்படுத்தி வருகிறோம் எனவும் இந்த வீடமைப்புத் திட்டம் ஆர பிக்கப் பட்ட பின்னர் பருகும் குடிதண்ணீரில் மண கலக்க படுவதாகவும் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டத்தில் சுமார் 100 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டதோடு இந்த வீடமைப்பு திட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள தங்களுக்கு உதவும் வகையில் சம்பந்தப்பட்ட அமைச்சர்களும், அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# தேர்தலில் போட்டியிட்டவர் திடீரென உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 13

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்ற தினத்தில் மாரடைப்பு காரணமாக வேட்பாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 10 ஆம் திகதி திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக ஜே.வி.பி.யின் வேட்பாளர் ஒருவர் உயிரிழந்தார்.

மாவத்தஹேன தெபஹெர பிரதேசத்தைச் சேர்ந்த எச்.பீ. பிரேமரத்ன என்ற 60 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாரடைப்புக் காரணமாக வத்து பிட்டிவல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

மீரிகம பிரதேச சபையின் ஜே.வி.பி வேட்பாளராக இந்த நபர் போட்டியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தனது தேர்தல் வெற்றிக்கு சிங்கள வாக்குகளே காரணம் என்கிறார் ரோசி சேனநாயக்க!

கொழும்பு, பெப். 13

தனது தேர்தல் தொகுதியின் சிங்கள வாக்குகளாலேயே தான் வெற்றி பெற்றுள்ளார் என கொழும்பின் முதல் பெண் மேயர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலின் போது கொழும்பு மாநகர சபையில் ஐ.தே.க பெரும் வெற்றி பெற்றுள்ள நிலையில், அக்கட்சி சார்பாக ரோசி சேனநாயக்க மேயர் பதவிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

தேர்தல் வெற்றி மற்றும் எதிர்காலப் பணிகள் குறித்து ஊடகமொன்றுக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில்-

எனது தேர்தல் தொகுதியின் பெருவாரியான சிங்கள வாக்குகளேதனது வெற்றியைத் தீர்மானித்துள்ளன.

அதேநேரம் அனைத்து இன மக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொழும்பு மாநகரசபைக்குத் தெரிவாகியுள்ள அனைத்து உறுப்பினர்களுடனும் இணைந்து செயலாற்றப் போகிறேன். பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்வதற்காக எந்தவொரு சவாலுக்கும் முகம் கொடுக்கத் தயார் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (க)

## தினசரி ராசி பலன் (13.02.2018)

*2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 1ஆம் நாள் செவ்வாய்க்கிழமை திரயோதசித்திதி இரவு 10.35 மணி வரை. பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: உத்தராடம் பி.இ.4.56 மணி வரை பின்னர் திருவோணம். மரணயோகம் பி.இ. 4.56 மணி வரை பின்னர் சுபயோகம்.*

**ராகுகாலம்** - மாலை 3.21 மணி முதல் 4.49 மணி வரை
**சுபநேரம்** - பகல் 10.59 மணி முதல் 12.29 மணி வரை
**திவசம் செய்ய வேண்டிய திதி**- மாசி மாத தேய்பிறை திரயோதசி.
**பிறந்த நட்சத்திர வழிபாடு:** உத்தராடம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** - மத்திமமான நாள். வருமானம் சுமாராக இருக்கும். குடும்ப அமைதி பேணப்படும். பெற்றோர், சகோதர வழியால் எதிர்பார்த்த சகாயங்கள் சற்று தாமதப்படும். அதிக உழைப்பு, அலைச்சல்கள் இருக்கும்.

**ரிஷபம்** - ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பணவசதி உபரியாகவும், தாராளமாகவும் அமையும். உடல் நலம் உற்சாகம் தரும். நினைத்த காரியம் எளிதில் கைகூடும்.

**மிதுனம்** - கவலையான நாள். பணவரவு குறையும். பிரச்சினைகள் அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகள் தோல்வியில் முடியும். தொழில் முன்னேற்றத்தில் தடைகள் உண்டாகும்.

**கடகம்** - சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சமமாக இருக்கும். செலவுகள் அளவுக்கு அதிகமாகும். எண்ணிய காரியங்கள் தாமதமாகும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்** - இனிமையான நாள். பணவசதி திருப்தி தரும். உடல்நலம், மனநலம் உற்சாகம் அடையும். தொழில் அரசாங்கத்தினரால் பக்கபலமும் பாராட்டும் கிடைக்கும். உறவினர்களால் சுபகாரியம் சித்திக்கும்.

**கன்னி** - உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். வேலைவாய்ப்பு திருமண வாய்ப்பு கூடிவரும். உத்தியோக உயர்வு கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் மேன்மை அடைவார்கள்.

**துலாம்** - துன்பமான நாள். பணவசதி குறைவடையும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். குடும்ப அமைதி குறையும். தொழிலில் பல தடைகள் உண்டாகும்.

**விருச்சிகம்** - மத்திமபலன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு மிஞ்சிய செலவுகளால் உடல், உள பாதிப்புக்கள் ஏற்படும். குடும்பத்தில் அமைதி குன்றும். சிலருக்கு விபத்துக்களும், நெருக்கடிகளும் வரும்.

**தனுசு** - இன்பமான நாள். பொருளாதாரம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். சிலர் உல்லாசப் பயணம் செல்ல ஆயத்தமாவார்கள். தூரதேசச் செய்திகள் மனநிறைவைத் தரும்.

**மகரம்** - அனுகூலமான நாள். பணவரவு தாராளமாக இருக்கும். எதிலும் வெற்றி, சரளமான லாபம் பெறுவார்கள். குடும்பத்தில் நல்லிணக்கம் உண்டாகும். புதிய நண்பர்களால் அதிகளவு உதவிகளைப் பெறுவார்கள்.

**கும்பம்** - அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல் அதிகரிக்கும். படித்துமுடிந்த சிலர் திறமைக்குத் தகுந்த வேலை தேடித் திரிவார்கள். சிலர் தேக சுகக் குறைவால் மருத்துவ உதவியை நாடுவார்கள்.

**மீனம்** - இனிமையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். அரசாங்க ஊழியர்கள் அதிகாரிகளின் ஆதரவும், பதவி உயர்வு முதலியனவும் பெறுவார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**சந்திராட்டமநாள்: கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதங்கள் ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# தேர்தலுக்குப் பின் 40 முறைப்பாடுகள் பதிவு!

கொழும்பு, பெப். 13

உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு வரை அமைதியாக காணப்பட்ட நிலை மாறி தற்போது வன்முறைகள் தலைதூக்கத் தொடங்கியுள்ளன என 'பவ்ரல்' அமைப்பு தெரிவிக்கின்றது.

கடந்த 36 மணித்தியாலத்தில் மட்டும் சுமார் 40 முறைப்பாடுகள் தேர்தல் வன்முறைகள் தொடர்பில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்தச் சம்பவங்களில் பாதிப்புற்ற 11 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளில் 11 தாக்குதல் சம்பவங்கள் மற்றும் 33 பெரும் குற்றச்செயல்கள் தொடர்பாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று 'பவ்ரல்' அமைப்பு தெரிவிக்கின்றது.

அதே நேரம் சட்டவிரோத கூட்டங்கள் மற்றும் பேரணிகள், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் நடந்து கொண்டமை போன்ற சம்பவங்கள் தொடர்பிலும் சுமார் 07 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல் மற்றும் அச்சுறுத்தல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக 12 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் 'பவ்ரல்' அமைப்பு தெரிவிக்கின்றது.

# ஆலயஉற்சவங்கள்

யாழ்ப்பாணம், பெப்.13

யாழ்.வண்ணை வேம்படிப்பிள்ளையார் திருக்கோவில் பெரும் திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது. 16 ஆம் நாளான 28 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (இ)

* * * * *

கோண்டாவில், பெப்.13

கோண்டாவில் கிழக்கு பழைய காளிகோவில் என அழைக்கப்படும் சிவமகாகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இந்த மஹோற்சவம் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ள துடன் 28 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பஞ்சரத பவனியும் மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ)

# சிவராத்திரி உற்சவம்

வட்டுக்கோட்டை, பெப்.13

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மகா சிவராத்திரி உற்சவம் இன்று மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

நான்கு சாமமும் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மறுநாள் அதிகாலை 4 மணிக்கு திருவூஞ்சல் உற்சவத்தைத் தொடர்ந்து எம்பெருமான் திருவீதியுலா வந்து ஆலய பித்தர் கேணியில் தீர்த்த உற்சவமும் நிகழும்.

'சத்தியவான் சாவித்திரி' வில்லிசைக் கச்சேரியும், நடன நிகழ்வுகளும் இடம் பெறும். (இ)

### சிவன் அறநெறிப் பாடசாலை

# அங்குரார்ப்பணமும் சிவராத்திரி விழாவும்

யாழ்ப்பாணம், பெப்.13

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும் யாழ். வண்ணார்பண்ணை, சிவன்கோயில் வடக்கு வீதி சிவன் அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வும் மகா சிவராத்திரி விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சிவன் சனசமூக நிலையத்தில் நிலையத் தலைவர் க. சண்முகராஜன் தலைமையில் இடம் பெறும்.

பிரதம விருந்தினராக உலக யோகா கேந்திர நிலைய இயக்குநரும் சித்த ஆயுள்வேத யோகாசனப் போதனாசிரியருமான சி.உமாசுதனும், சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.செந்தூரனும் கலந்து கொள்வர்.

வாழ்த்துரையை சனசமூக நிலைய போசகரும் பிரதேச செயலக முதியோர் சங்கத் தலைவருமான நா. சுந்தரராஜன் வழங்குவார். சிவன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (இ)

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை -

**யாழ். பிரதேசத்தில்**- கச்சார் வெளி ஆகிய பிரதேசத்திலும் -

**வவுனியாபிரதேசத்தில்**- அட்டம்பஸ்கட கிராமம், மதவுவைத்தகுளம், தவசிக்குளம், குட்செட்றோட், தோணிக்கல், பண்டாரிக்குளம், ஆகிய பிரதேசங்களிலும் -

மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

காலைக்கதிர் Kalaikkathir




தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 94

# உன்னைச் சரணடைந்தேன்



## குமாரதாசன் குடும்பம் கொழும்பு புறப்பட்டது

### மீண்டும் விசாரிக்கப்பட்டேன்

பெரிய கூட்டம் அங்கிருந்தது. யாழிலிருந்து வந்தவர்களை கொழும்பு உறவினர்கள் அழைத்துச் சென்று கொண்டிருந்தனர். கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டம் குறைய ஆரம்பித்தது. இடப்பெயர்வுக்கு முன்னரே கொழும்பு வந்து விட்ட, எனது அக்கா குடும்பத்தாரும் குமாரதாசன் குடும்பத்தாரும் வெள்ளவத்தையில் ஒரு வீடு எடுத்துத் தங்கியிருந்தனர். அவர்கள் முகவரி எங்களுக்குத் தெரியாததால் நண்பரான பூபாலசிங்கம் ஸ்ரீதரசிங்கின் வீட்டு முகவரி யையே, நாங்கள் இராணுவ முகாமில் கொடுத்திருந்தோம். கொஞ்சம் கொஞ்சமாக எல்லோரும் போய்க் கொண்டிருந்தார்கள். எங்களை மட்டும் அனுப்புகிற பாடாய்த் தெரியவில்லை.

பயணக் களைப்பு ஒரு புறம். ஒரு மரத்தின் கீழ் நால்வரும் குந்தியிருந்தோம். திடீரென என்னை மட்டும் விசாரணைக்கு மீண்டும் அழைத்தார்கள். எங்களைப் பற்றிய விவரங்களை ஒவ்வொன்றாய்க் கேட்கத் தொடங்கினார்கள். பிரபாகரன் மாளிகை விட யம் தவிர, மற்ற எல்லாவற்றையும் சொன்னேன். அவர்கள் பொதுப்பட என்னை விசாரிக்கிறார்கள் என்றே நினைத்தேன். சுற்றி வளைத்து விசாரித்தவர்கள் இறுதியில், ''உங்களது இடம் நல்லூர் என்கிறீர்கள். அங்கு இருந்த பிரபாகரன் மாளிகையைத் தெரியுமா?'' என்று கேட்டார்கள். உடனே நான் உசாரானேன்.

★ ★ ★

### தெரிந்தே பிடித்தது தெரியவந்தது

இவர்கள் விடயந் தெரிந்து தான் என்னை விசாரிக்கிறார்கள் என்று உள்ளுணர்வு சொல்ல, சுதாகரித்துக் கொண்டு ''அது பிரபாகரனின் கட்டடம் இல்லை. எங்களது கட்டடம் தான். தெரியாமல் அதைப் பிழையாய் அறிவித்து விட்+டார்கள்'' என்றேன். ''யார் கட்டடத்தின் பொறுப்பாளி'' என்று கேட்டார்கள். ''நான் தான்'' என்றேன். ''உன்னோடு வந்திருக்கும் மற்றவர்கள் யார்?'' என்றார்கள். அவர்களுக்கும் பிரச்சினை வந்துவிடக் கூடாது என்பதற்காக, ''அவர்கள் என் நண்பர்கள்'' என்று மட்டும் சொன்னேன்.

ஆரம்ப காலத்தில் சிலாபத்தில் படித்ததால் எனக்கு சிங்களம் ஓரளவு விளங்கும். ஆனால், பேசமாட்டேன். விசாரணையின்போது எனக்குச் சிங்களம் கொஞ்சமும் தெரியாததாய் நான் காட்டிக் கொண்டேன். அவர்கள் எனக்குச் சிங்களம் தெரியாது என்று நினைத்து, தமக்குள் சிங்களத்தில் பேசிக் கொள்ள, விஷயம் தெரிந்து தான் அவர்கள் என்னை விசாரிக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டேன். மனதுக்குள் பெரும் பதற்றம் ஆனாலும், வெளிக்காட்டாமல் துணிந்தவன் போல் நான் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். பிறகு என்னோடு வந்தவர்களையும் ஒவ்வொருவராய் விசாரித்தார்கள். நல்ல வேளை, யார் விசாரித்தாலும் உண்மையை மட்டுமே சொல்வதென நாம் முன்னரே கூடி முடிவெடுத்திருந்தோம் .அதனால் எங்கள் பதில்களுக்குள் முரண்பாடு இருக்கவில்லை. நாம் தப்புவதற்கு அதுவும் ஒரு காரணமாயிற்று.

★ ★ ★

### அரச அதிபர் கைவிட்டார்

விசாரித்து விட்டு, விட்டுவிடுவார்கள் என நினைத்தோம். அது நடக்குமாப்போல் தெரியவில்லை. நேரம் ஆக ஆக பயம் பிடித்துக் கொண்டது. எங்களோடு வந்த சனம் எல்லாம் போய்க் கொண்டிருக்க நாங்கள் மட்டும் தனித்திருந்தோம். வவுனியா அரச அதிபரைச் சந்தித்து நாங்கள் யார் எனும் விடயத்தை இராணுவத்திற்குச் சொல்லச் சொன்னால் ஒரு வேளை எம்மை விட்டு விடக் கூடும் என எங்களுக்குள் கூடி முடிவெடுத்து நானும் ரத்தின குமாருமாக ஓர் ஓட்டோ பிடித்து அரச அதிபரின் அலுவலகத்திற்குச் சென்றோம். அங்கு ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. எங்கள் பதற்றத்தில் அதைப் பற்றி கவலைப் படாமல் உள் நுழைந்தோம்.

அப்பொழுது கணேஸ் என்பவர் வவுனியா அரச அதிபராக இருந்தார். அவருக்கு எங்களைத் தெரிந்திருந்தது. நாம் நிலைமையைச் சொன்னதும் அவர் நடவடிக்கை எடுப்பார் என நினைந்தோம். ஆனால், அவரோ ''உங்கட கட்டடத்தைத் தான் பிரபாகரனது மாளிகை என்று காட்டினது தெரிந்தால் பிறகேன் வெளிக்கிட்டு வந்தனீங்கள்?'' என்றார். சப்பென்று போய் விட்டது. ''எதற்கும் நான் பேசிப் பார்க்கிறேன்'' என்று கூறி அனுப்பி வைத்தார். ஒன்றும் நடக்கவில்லை. இரவு எட்டு மணிபோல அவரும், அப்போது கிளிநொச்சி ஜி.ஏ. ஆக இருந்த தில்லைநடராஜா அவர்களும் முகாமிற்கு வந்து எங்களுக்கு ஆறுதல் மட்டும் கூறிச் சென்றனர். அடுத்த நாள் அகளங்கன் போன்ற இலக்கியக்காரர் ஓரிருவரும் முகா முக்கு வந்து எங்களைப் பார்த்துச் சென்றனர்.

★ ★ ★

### ஓட்டோக்காரனின் அன்பு

சொகுசாய் வாழ்ந்து பழகிவிட்ட எனக்கு, குளித்து உடை மாற்ற வேண்டும் எனும் தவிப்பு ஒரு பக்கம். வவுனியாவிலிருக்கும் யாராவது கையொப்பம் இட்டால் அவர்கள் வீட்டிற்கு எங்களை அழைத்துச் செல்லலாம் என்றார்கள். தெரிந்தவர்கள் பலர் அங்கிருந்தனர் முள்ளுக்கம்பி வேலிக்கூடாக எங்களைக் கண்டு பேச வந்தவர்கள் நிலைமையை அறிந்ததும் மெல்ல நழுவினார்கள். யாழ்ப்பாணத்திலிருந்த போது பட்டிமண்டபங்களுக்குசிலவேளைகளில் ஓட்டோவில் செல்வோம். ஒரு ஓட்டோவில் ஏழு பேர் வரை ஏறுவோம். டிரைவருக்கு இரு பக்கத்திலும் இருவர், பின் சீற்றில் மூவர் அவர்கள் மடியில் இருவர் என, பயணம் 'சர்க்கஸ்' வேடிக்கையாய் நடக்கும். அப்போது எங்களை ஓர் இளைஞன் தான் ஓட்டோவில் அழைத்துச்செல்வான். அந்த இளைஞன் வவுனியாவில் எங்களைக் கண்டதும் கையொப்பமிட்டு, தன் வீட்டுக்கு எங்களை அழைத்துச் செல்ல முயன்றான். இராணுவம் அவனை இரகசியமாகக் கூப்பிட்டு மிரட்டியது. அவனுக்கும் பிரச்சினை வேண்டாமே என்று, அவனைப் போகச் சொல்லி விட்டோம்.

★ ★ ★

### இறைகருணை அங்கும் இருந்தது

அன்றிரவு வெறும் நிலத்தில் துண்டை விரித்துப் படுத்தோம். என்னை நடுவில் படுக்க விட்டு ரகுபரனும், ரத்தினகுமாரும் இரண்டோரங்களிலும் படுத்துக் கொண்டனர். அவர்கள் அதிகம் பயப்படவில்லை. நானோ பயத்தில் விறைத்துப் போயிருந்தேன். அநியாயமாய், சாவகச்சேரியை விட்டு வந்தோமே என மனம் சலித்துக் கொண்டது. இனி என்ன நடக்கப் போகிறதோ? என்ற பயத்தில் அன்று கண் மூட முடியவில்லை. நடுங்கிய படி இரவு முழுவதுவும் கிடந்தேன். காலையில் கண் விழித்துப் பொதுத் தொட்டியில் முகம், கை, கால் கழுவி மீண்டும் வந்து உட்கார்ந்தோம். வசதியாய் வாழ்ந்த எனக்கு அது பெரிய தண்டனையாய் இருந்தது. அந்த முகா முக்குள் ஓர் அரச அலுவலகம் இயங்கியது. அவ் அலுவலகத்திற்கு ஒரு மட்டக்களப்பு இளைஞன் பொறுப்பாக இருந்தான். வெளியில் வந்த அவனுக்கு, என்னைத் தெரிந்திருந்தது. தானாக வந்து மரியாதையாய்ப் பேசினான். எங்கள் நிலையை அறிந்து, ''கவலைப் படாதீர்கள், எனது அறையில் நீங்கள் தங்கலாம்'' எனக் கூறி, இராணுவத்திடம் சொல்லிவிட்டு, தன் அறைக்குள் எம்மை அழைத்துச் சென்றான்.

'அட்டாச் பாத்ரூம்', கட்டில்களோடு அந்த அறை இருந்தது. எனக்குச் சொர்க்கத்தைக் கண்டது போன்ற மகிழ்ச்சி. ஆசை தீரக் குளித்து கொஞ்ச நேரம் கட்டிலில் படுத்துறங்கினேன். முகாமுக்குள்ளும் வசதியாக இருந்த ஒரே ஆள் நானாக்கத் தான் இருப்பேன். இறை கருணை அங்கும் பொழிந்தது. என் நிலை கண்டு ரத்தினகுமாரும், ரகுபரனும் பெரிதும் வருந்தினார்கள். என்னைத் தெம்பூட்டி ஆறுதல் சொல்லியபடி இருந்தார்கள். இடையிடையே இராணுவம் மூவரையும் தனித்தனி அழைத்து திரும்பத் திரும்ப ஒரே விஷயங்களையே விசாரித்தது. பிறந் ததிலிருந்து வவுனியா வந்தது வரையிலான அனைத்து விடயங்களையும் கேட்டு எழுதினார்கள். ஒவ்வொரு தரம் அழைக்கப் படுகையிலும் அதே கேள்விகளே மீண்டும் மீண்டும் கேட்கப்பட்டன. ஒரே பதிலைச் சொல்லிச் சொல்லி சலித்துப் போய் விட்டோம். பொய்யான பதிலானால் திரும்பத்திரும்பக் கேட்கப்படுகையில் மாறிப்பதில் சொல் வோம் என எதிர்பார்த்தார்கள் போலும், அவர்கள் நோக்கம் நிறைவேறவில்லை.

★ ★ ★

### எதிரிக்கும் வேண்டாம் இத்துன்பம்

இப்படியே மூன்று நாள்கள் கழிந்து போயின. இன்று விடுபடுவோம் நாளை விடுபடுவோம், என நினைந்து, நினைந்து, நாம் ஏங்கிய ஏக்கத்தை, வார்த்தைகளிற் சொல்லிமாளாது. ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஜெயிலில் வருடக்கணக்கில் வாடுவதாய் பத்திரிகையில் படிக்கும் போதெல்லாம் அன்று நான் பட்ட துன்பம்தான் ஞாபகத்திற்கு வரும். துடித்துப் போவேன். மூன்றாம் நாள் முடிந்து விடிய ஆச்சரியம் காத்திருந்தது.

★ ★ ★

### விடுவிக்கப்பட்டோம்

விடியக் காலை எங்களைத் தேடி கொழும்பிலிருந்து குமாரதாசனும், எனது அத்தானும், ரகுவின் அப்பாவும் வந்திருந்தனர். இராணுவம் அறிவித்ததால் எங்களைக் கூட்டிச் செல்ல வந்ததாய்ச் சொன்னார்கள். அன்று நான் பட்ட ஆனந்தத்திற்கு ஓர் அளவில்லை. அன்றும் இராணுவம் எங்களை மீண்டும் விசாரித்து விடுவித்தது. இரவு பத்து மணி ரயிலில் கொழும்பு செல்வதென முடிவு செய்தோம். ஏனோ இரவு புறப்படுவதில் ரத்தினகுமாருக்கு உடன்பாடிருக்கவில்லை. ஆனால் எனது பிடிவாதத்தால் புறப்படுவதாய் முடிவாயிற்று. இரவு எட்டரை மணிக்குச் சாப்பாடுகளும் கட்டிக் கொண்டு 'ரயில்வே ஸ்ரேசன்' வந்து சேர்ந்தோம்.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



சைவப்புலவர்
**எஸ்.ரி.குமரன்**
(செயலாளர், அகில இலங்கை
சைவப்புலவர் சங்கம்)



## சிவனுக்குரிய சிறப்பு மிக்க

# சிவராத்திரி விரதம்

மகா சிவராத்திரி விரதம் சைவ மக்களால் கொண்டாடப்படும் சிவனுக்குரிய சிறப்பு வாய்ந்த விரதமாகும். இவ்விரதம் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ச (தேய் பிறை) சதுர்த்தசி திதியில் இரவில் கொண்டாடப்படும். இதன் நோன்பு முறைகளைக் கூறும் நூல் 'மகா சிவராத்ரி கற்பம்' என்னும் சிறிய நூல். இவ் விரதத்தின் மூலம் சிவலோகத்தையும் சிவ சாயுச்சியத்தையும் அடைவார்கள். சிவராத்திரி காலத்தில் சிவபூஜை செய்பவர்களுக்கு சுகவாழ்வும் பரத்தில் கைவல்யமும் கிட்டும் எனச் சொல்லப்படுகின்றது.

சிவராத்திரி விரதம் கடைப்பிடிப்போர் (விரதம் பிடிப்போர்) முதல் ஒருநாள் ஒரு பொழுது உணவருந்தி சிவராத்திரியன்று உபவாசமாய் சிவ சிந்தனையுடன் கண் விழித்திருந்து நான்கு யாம வழிபாடு செய்ய வேண்டும். அடுத்தநாள் காலையில் தீர்த்த மாடி சுவாமி தரிசனம் செய்து அடியார்களுடன் உணவருந்தி (பாரணை செய்து) விரதத்தை நிறைவு செய்தல் வேண்டும்.

சிவராத்திரி புண்ணிய தினத்தில் சிவாலயங்களில் நடைபெறும் நான்கு யாம அபிசேக ஆராதனைகளுக்கு அவரவர் வசதிக் கேற்ப பொருள்களைக் கொடுத்து உதவலாம். மகா சிவராத்திரி மாசி மாதம் கிருஷ்ணபட்ச சதுர்த்தசியன்று வருவது. மஹா சிவராத்திரி மற்ற எல்லா சிவராத்திரிகளை விடவும் இதுவே சிறப்புடையது. பல்வேறு வகையான பெரிய நலன்களை இது வழங்குவது. மற்ற சிவராத்திரிகளில் பெறும் எல்லாப் பேற்றையும் இது ஒருசேர வழங்குவதால் இது மகாசிவராத்திரி என்று போற்றப்படுகிறது. மகா சிவராத்திரியில் நான்கு காலங்களிலும் இரவில் பூஜை செய்ய வேண்டும். சிவபஞ்சாயதனம் கைக்கொண்டவர்கள் இரவில் பூஜையைத் தரித்து நற்பலன் பெற வேண்டும்.

சிவராத்திரி என்ற சொல்லே மோட்சம் தருவது என பொருள் பெறும். சிவ வசீகரண மந்திரத்தை ருத்திர பூமியில் இந்தப் புண்ணிய நாளில் ஜெபம் செய்து தேவதா வஸ்யம் முதல் பல லாபங்களை அடையலாம். குருவான சிவபெருமான் இதற்கு அருளுவார்.

ஒவ்வொரு கடவுளுக்கும் ஒவ்வொரு திதி உண்டு. ஈஸ்வரனுக்குரிய திதி இறுதித்திதியானசதுர்த்தசி திதி ஆகும். எல்லா உயிர்களும் தங்கள் வாழ்வின் இறுதியில் அவரையே அடைகின்றன என்பதால் இந்த இறுதித் திதியை அவருக்கு ஒதுக்கினார்கள். அதில் மாசி மாதம் தேய்பிறையில் வரும் சதுர்த்தசி இரவே மகிமை மிக்க'மகா சிவராத்திரி ஆகும்.

இவ்விரத்தைப் பற்றிய ஐதீகங்கள் பல உள்ளன. ஒரு காலத்தில் உலகப் பிரளயத்தின் போது உயிர்கள் எல்லாம் சிவனிடத்தே ஒடுங்கின. உலகங்களே தோன்றவில்லை. இந்த நிலையில் எல்லையில்லாக் கருணையுடைய அம்பிகை அண்டங்கள் தோன்றி இயங்கும் பொருட்டு இறைவனை இடைவிடாது தியானம் செய்தாள்.

அப்போது இறைவன் தன்னுள் ஒடுங்கி இருந்த உலகங்களை மீண்டும் உண்டாகச்செய்து உயிர்களையும் படைத்தருளினார். அப்பொழுது உமையவள் சுவாமி நான் தங்கள் மனதில் தியானித்துப் போற்றிய காலம் 'சிவராத்திரி' என்று பெயர் பெறவேண்டும் என்றும் அதனைச் சிவராத்திரி விரதம் என்று யாவரும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அதை கடைப்பிடிப்பவர்கள் எல்லா நலன்களும் பெற்று முக்தியடையவேண்டும் என்றும் பிரார்த்தித்தார். இறைவனும் அவ்வாறே என்று அருள் புரிந்தார். அம்பிகையைத் தொடர்ந்து நந்தியம் பெருமான், சனகாதி முனிவர் சிவராத்திரி விரதம் அனுஷ்டித்து தங்கள் விருப்பம் நிறைவேறப்பெற்றனர்.

மகாபிரளயத்தின் பின்னர் எம்பெருமான் சிவபெருமான் தனியாக இருந்து ஆழ்ந்த தவத்தில் மூழ்கியிருந்தார். எப்போதும் உடனாய சிவகாமியம்மை மீண்டும் அண்ட சராசரங்களையும் படைக்க வேண்டி எம்பெருமானை நோக்கித் தவமிருந்தார். அன்னையின் தவத்தின் பயனாக ஐயன் திருவருட்சம்மதம் அருளினார். அன்னையின் தவத்தில் மகிழ்ந்த எம்பெருமான் அன்னையின் திருவுள்ள விருப்பத்திற்கு அமைய 'இந்நாளாகிய சிவராத்திரிச் சாமப் பொழுதில் கண்விழித்து விரதம் இருப்பவர்க்குரிய பலனை தந்தருளினார்.

அம்பிகைக்கு சிவன் அருவுருவில் (உத்பவம்) உபதேசம் செய்த ஆகம உபதேச புண்ணிய காலமான மகா சிவராத்திரி விரதம் கடை பிடிக்கும் போது புத்சாலிக் குழந்தைகள் அமைவர். குபேரனிடம் இருப்பது போல் வற்றாத செல்வம் கிடைத்து நிலைக்கும். ஒரு வருடம் முழுவதும் ஐந்து பிரிவு சிவராத்திரி விரதம் கடைபிடித் தால் அசுவமேதயாகம் செய்த பயன் கிடைக்கும் என்பது ஐதீகம்.

சிவராத்திரி விரத முறையில் சிவராத்திரிக்கு கண் விழிப்பது ஏன்? சிவராத்திரி அன்று கண் விழித்திருந்து விரதமிருந்து இறைவனை வணங்கும்போது முழுமையான இறைவன் அருள் கிடைக்கும். தியானம் நிலைக்கும். நினைத்த காரியம் நடக்கும். சிவராத்திரிக்கு மறுநாள் சிவபுராணம் படித்தோ அல்லது கேட்டோ பகல் பொழுதைக் கழிக்க வேண்டும். உபதேசம் தந்த குருவைப் பூஜை செய்து விட்டு உடைகள் மற்றும் உணவினை அந்தணர்க்கு தானமாக அளித்து விரதத்தை நிறைவு செய்யும் விதமாக உணவு உண்ண வேண்டும்.

சிவராத்திரி விரதம் இருப்பதால் தெரியாமல் செய்த பாவங்களுடன் தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவை நம்மை விட்டு நீங்கிப் போகும். இவர்தான் சிவராத்திரி விரதம் இருக்கலாம். இவர் இருக்கக் கூடாது என்ற விதியெல்லாம் கிடையாது. யார் வேண்டுமானாலும் சிவராத்திரி விரதத்தை மேற்கொள்ளலாம்.



சிவராத்திரியன்று அதிகாலை எழுந்திருந்து காலைக் கடன்களை முடித்து சிறப்பாக வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவதும் நாவினுக்கருங்கலம் ஆனதும் பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணி நின்றறுப்பதுமான இறைவனின் பஞ்சாட்சர மந்திரத்தைக் கூறி பூஜை செய்ய வேண்டும். எதுவும் உண்ணுதல் கூடாது. ஆலயம் சென்று லிங்க மூர்த்தியையும் அம்பாளையும் தரிசித்து வரலாம். நாள் முழுவதும் இறைவனின் நாமத்தை ஜபித்துக் கொண்டிருக்க வேண்டும்.

நான்கு யாம வழிபாட்டிற்குரிய திரவியங்கள் முதல் யாமம் வழிபட வேண்டிய மூர்த்தம் - சோமாஸ்கந்தர் , அபிஷேகம் - பஞ்சகவ்யம் , அலங்காரம் -வில்வம்

அர்ச்சனை -தாமரை அலரி , நிவேதனம் -பால் அன்னம் சர்க்கரைப் பொங்கல் , பழம் - வில்வம் , பட்டு - செம்பட்டு, தோத்திரம் - இருக்கு வேதம் சிவபுராணம், மணம் - பச்சைக் கற்பூரம் , தேர்ந்த சந்தணம் , புகை - சாம்பிராணி , சந்தணக்கட்டை , ஒளி- புட்பதீபம்

இரண்டாம் யாமம் வழிபட வேண்டிய மூர்த்தம் - தென்முகக் கடவுள் , அபிஷேகம்-பஞ்சாமிர்தம் , அலங்காரம்-குருந்தை, அர்ச்சனை- துளசி , நிவேதனம் -பாயசம் சர்க்கரைப் பொங்கல் , பழம் - பலா, பட்டு -மஞ்சள் பட்டு , தோத்திரம் - யசுர் வேதம் கீர்த்தித் திருவகவல் , மணம் -அகில் சந்தனம் , புகை - சாம்பிராணி குங்குமம் , ஒளி- நட்சத்திரதீபம்

மூன்றாம் யாமம் வழிபட வேண்டிய மூர்த்தம் - இலிங்கோற்பவர் , அபிஷேகம் - தேன் , அலங்காரம் - கிளுவை, விளா , அர்ச்சனை -மூன்று இதழ் வில்வம் சாதி மலர், நிவேதனம் - எள் அன்னம் , பழம் - மா துளம் , பட்டு - வெண் பட்டு, தோத்திரம் - சாம வேதம் திருவண்டப்பகுதி , மணம் - கஸ்தூரி சேர்ந்த சந்தணம் , புகை - மேகம் கருங் குங்கிலியம் , ஒளி- ஐந்துமுக தீபம்

நான்காம் யாமம் வழிபட வேண்டிய மூர்த்தம் -சந்திரசேகரர்(இடபரூபர்), அபிஷேகம் -கருப்பஞ்சாறு வாசனை நீர் , அலங்காரம்- கரு நொச்சி , அர்ச்சனை - நந்தியாவட்டை , நிவேதனம்- வெண் சாதம் , பழம் - நானாவித பழங்கள் , பட்டு - நீலப் பட்டு , தோத்திரம்- அதர்வண வேதம் , போற்றித்திருவகவல் , மணம்- புணுகு சேர்ந்த சந்தணம் , புகை- கர்ப்பூரம் இலவங்கம் , ஒளி- மூன்று முக தீபம். மகாசிவராத்திரி புண்ணிய தினம் சிவ பெருமானை வழிபட்டால் கவலைகள் அனைத்தும் நீங்கும் காரிய வெற்றியும் ஏற்படும். 'சிவாய நம' என்று சிந்தித்திருந்தால் 'அபாயம்' நமக்கு ஏற்படாது, 'உபாயம்' நமக்கு ஏற்படும் என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். அந்த புனிதமான நாளில் விரதம் இருந்தால் புண்ணியமும் கூடும். பொருளாதார நிலையும் உயரும் இதனால்தான் 'சிவராத்திரி' விரதம் சிறந்த பயனைக் கொடுக்கிறது. சைவ அன்பர்களாகிய நாம் சிவராத்திரி விரதத்தினை அனுட்டித்து இம்மை மறுமைப் பயன்களைப் பெற்று உய்வோமாக.

★

> **'சிவராத்திரி விரத முறையில் சிவராத்திரிக்கு கண் விழிப்பது ஏன்? சிவராத்திரி அன்று கண் விழித்திருந்து விரதமிருந்து இறைவனை வணங்கும்போது முழுமையான இறைவன் அருள் கிடைக்கும். தியானம் நிலைக்கும். நினைத்த காரியம் நடக்கும்.'**

# இரவு நேர வழிபாடு சிறப்புமிக்கது

மண்டைதீவு ' மகிழ்நன்'
கை. பேரின்பநாயகம்



"பசித்திருந்தும் விழித்திந்தும் வழிபாடு இயற்றுவதே மகா சிவராத்திரி விரதமாகும் ....."

முழு முதல் தெய்வமான சிவனை மனதிருத்தி மனித பிறவியின் மேலான பிறவிப் பயனின் நோக்கமான வீடுபேறு அடைவதே ஆன்மாக்களின் தவப்பேறாகும்.

இந்த தவப்பேறை அடைவதற்காக ஜீவாத்மாக்கள் பேராத்மாவை வழிபடுவதே சிவராத்திரி விரதமாகும். இது விரதமல்ல தவம்மென்பதே சரியானதாகும்.

அகப்புற, மாசு அகற்றி, மனதை ஒருநிலைப்படுத்தி மனம் தன் வழி போகாது. இறைவனான சிவபெருமானை வந்திக்க வேண்டுவதே விரதம்.

ஜீவாத்மாக்கள் பரமாத்மாவை கலந்து நிலையான பேரானந்தப் பெருவாழ்வைக் காண. அடைய தடையாக இருப்பது ஆணவமாகும். மூலமலமென்பர் இதைப் பெரியோர்.

இந்த வினைகளின் பிடியில் இருந்து இயல்பாகவே நீங்கியவர் பரமாத்மா ஆகிய சிவனே. பிரம்மா. விஷ்ணு ஆகியோரின் செருக்கை அடக்கி (போக்கி) ஞானத்தை போதிக்கவே எம்பெருமான் மாசி மாதத்து அமாவாசை தினத்தில் சித்தம் கொண்ட பெருநாளே சிவன் ராத்திரியாகும்.



விழித்திருந்தும் பசித்திருந்தும் தனித்திருந்தும் கூட சிவனை வழிபாட வேண்டிய தேவை மாசி மாத தேய்பிறை முடிவாகிறது. மலையில் இருந்து எழுந்து யுகங்களைக் கடந்த லிங்க வடிவு. சோதிலிங்கமென்றும் சோதிர் லிங்கம் என்றும் அழைக்கப்பட்டது. லிங்க வழிபாடு இந்து மதத் தின் உயிர் நாடி பெரியதில் பெரிதாகவும் சிறியதில் சிறியதாகவும் இருப்பது லிங்க வடிவம்.

உருவமும், அருவுருவமும் ஆனது சிவலிங்கம் (Form And Form-less) ஒன்றாகி இரண்டாகி மூன்றாகி சகலமுமான வடிவம் அது. சிவலிங்கங்கள் பலவகைப்படும். இதில் இரண்டு பகுதிகள் பிரதானம் அண்டம் மற்றும் ஆவுடையார் மேற்பகுதி அண்டமாகும். அடிப்பகுதியே ஆவுடையார் ஆகும்.

பூசை பிரார்த்தனை வேளைகளில் சிவலிங்கத்துள் மின்காந்த ஓட்டங்கள் இருப்பதை நவீன விஞ்ஞான ஆய்வுகள் நிரூபித்துள்ளன. சுருக்கமாக கூறுவதானால் பிரபஞ்ச வடிவே சிவலிங்கத்துள் அடக்கம். பிரபஞ்சத்தில் விஞ்ஞானம் கண்டறிந்த உண்மைகள் கண்டறியப்படாதவை, அறியப்படவுள்ளவை எல்லாம் சிவலிங்க வழிபாட்டின் மூலம் அறிந்து கொள்ளப்படும். இந்த பூமிக் கோளில் உள்ள சிவாலயங்கள் தோறும் விசேட பூசைகள் நடைபெறும். அதேபோல் சகல இந்து ஆலயங்களிலும் விசேட பூசை வழிபாடு இருக்கும்.

இரவு நேர வழிபாடு சிறப்பானது. முக்கால பூசை வழிபாடுகள் முச்சாம பூசை என அழைக்கப்படும்.

பூசை இறுதியில் லிங்கோற்பவரை வழிபட மறத்தலாகாது. இந்த வழிபாடே விரத பலன் மற்றும் பூசையின் புண்ணியத்தை முழுதாத் தரும்.

"ஓம் சிவாய நமக"




# வானொலியை செவிமடுப்போம் பயன் பெறுவோம்

செல்வி சுபாஜினி குணரட்ணம்,
(ஆசிரியர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)

இன்று உலக வானொலி தினமாகும். ஸ்பெயின் நாட்டினுடைய வானொலி மன்றம் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) சபையின் 36வது பொதுச்சபை கூட்டத்தில் முதன் முதலாக கார்த்திகை 3ஆம் திகதியை உலக வானொலி தினமாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தியது. ஆயினும் ஐ.நா. சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாசார அமைப்பான யுனெஸ்கோ நிறுவனம் ஐ.நா வானொலி ஆரம்பிக்கப்பட்ட பெப்ரவரி மாதம் 13ஆம் திகதியை உலக வானொலி தினமாக 2011ஆம் ஆண்டு அறிவித்தது.

அன்றிலிருந்து இந்த உலக வானொலி தினம் ஐ.நா சபையின் சர்வதேச ஒலிபரப்பு சேவை ஆரம்பிக்கப்பட்ட நாளாகிய 1946 ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதியை மையமாக வைத்து ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதியை யுனெஸ்கோ கொண்டாடி வருகிறது. சர்வதேச வானொலி கழகம் 2012 ஆம் ஆண்டு உரு வாக்கப்பட்டு இயங்கி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

வானொலியை ஓர் ஊடகமாகக் கொண்டு, ஒலிபரப்புச் சேவையைக் கொண்டாடவும் பல்வேறு நாட்டு ஒலிபரப்பாளர்களிடையே ஓர் ஒற்றுமையை - கூட்டுறவை ஏற்படுத்தவும், ஒத்துழைப்பை ஏற்படுத்தவும், ஒலிபரப்புச் சம்பந்தமான முடிவெடுப்பாளர்களை ஊக்குவிக்கவும், வானொலிகள் - மற்றும் சமூக வானொலிகள் மூலமாக தகவல்களைப் பரிமாற ஊக்குவிக்கவும் வானொலி வலையமைப்புக்களை ஊக்கப்படுத்தவும், வானலையில், தகவல் மற்றும் தகவல் சுதந்திரம் ஆகியவற்றை மேம்படுத்தவும் ஐ.நா. இந்த வானொலி தினத்தை சர்வதேச ரீதியில் கொண்டாடுகின்றது. அத்துடன் அனைத்து நாடுகளும் இந்த தினத்தை கொண்டாட வேண்டும் என்று யுனெஸ்கோ நிறுவனம் விரும்புகிறது.

## வானொலி கண்டுபிடிப்பு

மின்காந்த அலைகளின் வழி செய்தி அறிவிப்பு, பாடல் மற்றும் உரையாடல் ஒலியலைகளை ஏற்றி வான்வழியே செலுத்தி ஒரே நேரத்தில் தகவல்களை அதிகளவான மக்களுக்கு கொண்டு சேர்க்கக்கூடிய ஒரு வெகுஜன ஊடகமாக வானொலி திகழ்கின்றது. ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல், மைக்கேல் பாரடே ஆகிய இரு விஞ்ஞானிகள் மின்காந்த அலைகளை,ஒலி அலைகளாக மாற்றும் கருவியை கண்டறிந்தனர்.

இவர்களைப் பின் பற்றி ஹென்றிச் ஹெர்ட்ஸ் என்பவர், மின்காந்த அலைகளை, டிரான்ஸ் மீற்றராக மாற்றினார். பின்னர், இத்தாலியைச் சேர்ந்த குக்லியெல்மோ மார்க்கோணி (1874-1937) வானொலியை கண்டறிந்தார். இவர் நீண்ட தூரம் ஒலிபரப்பப்படும் வானொலியின் தந்தை என அழைக்கப்படுகிறார். கம்பியற்ற தகவல் தொடர்பு முறை மற்றும் மார்க்கோணி விதி ஆகியவற்றை உருவாக்கியவர்.


இக்கண்டுபிடிப்பிற்காக இயற்பியலுக்கான நோபல் பரிசை 1909ஆம் ஆண்டு கார்ல் பெர்டினாண்ட் பிரவுன் உடன் இணைந்து பெற்றுக்கொண்டார். இவர் ஒரு தொழில் முனைவர், தொழிலதிபர் மற்றும் 1897இல் மார்க்கோணி வானொலி நிறுவனத்தின் நிறுவுனர், வானொலி மற்றும் அதனோடு தொடர்புடைய கருவிகளை உருவாக்கியவர். செலவுகுறைந்த மிகவும் பலம்வாய்ந்த ஒரு தொடர்பாடல் ஊடகமாக வானொலி காணப்படுகிறது. தகவல் மிகத்தூரத்தில் உள்ள குழுமங்களும் சாதாரண எளிய மக்களையும் மிக விரைவில் சென்றடையக் கூடிய வகையில் வானொலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

## உலக வானொலி தினத்தின் தொனிப்பொருள்

வானொலியூடாக பால்நிலைச் சமத்துவத்தை, பெண்களை வலுவூட்டல் என்னும் தொனிப்பொருளில் 2014 ஆம் ஆண்டுக்கான வானொலிதினம் கொண்டாடப்பட்டது. இளைஞர்களும் வானொலி என்னும் தொனிப்பொருளில் 2015ஆம் ஆண்டுக்கான வானொலி தினம் கொண்டாடப்பட்டது. பால்நிலை சமத்துவம், பெண்களை வலுப்படுத்தல், இளையோர், அனர்த்தங்கள் மற்றும் அவசர கால நேரங்களிலும் வானொலி என்னும் தொனிப்பொருளில் 2016ஆம் ஆண்டுக்கான உலக வானொலிதினம் கொண் டாடப் பட்டது.

நீங்களே வானொலி Radio is you என்னும் தொனிப்பொருளில் 2017ஆம் ஆண்டுக்கான வானொலிதினம் கொண்டாடப்பட்டது. அந்த வகையில் உலகளாவிய ரீதியில் 13.02.2017 அன்று உலக வானொலி தினத்தை முன்னிட்டு வானொலி நிலையங்கள், சிவில் சமூகம் மற்றும் வானொலி நேயர்கள் இணைந்து 110 நாடுகளில் 550 இற்கும் மேற்பட்ட நிகழ்வுகளை கொண்டாடியிருந்தனர். ஐ.நா. சபையின் யுனெஸ்கோ அமைப்பானது சமூகப்பொறுப்புணர்வுடன் கூடிய வானொலிச் சேவையை உலகளாவிய ரீதியில் ஊக்குவிப்பதை தனது இலக்காக கொண்டு செயற்பட்டது.

வானொலியும் விளையாட்டுக்களும் "Radio And Sports" என்னும் தொனிப்பொருளை 2018 சர்வதேச வானொலி தினத்தின் கருப்பொருளாக கொண்டு இத்தினம் கொண்டாடப்படுகிறது. விளையாட்டு நிகழ்வுகள், உலகின் எந்த மூலையில் மக்கள் இருந்தாலும்



அவர்களின் இதயங்களை, மனநிலைகளை இணைக்கும் வல்லமை கொண்டுள்ளதால் யுனெஸ்கோ நிறுவனம் உலகில் உள்ள அனைத்து வானொலி ஒலிபரப்பு சேவை நிலையங்களையும் விளையாட்டு நிகழ்வின் அழகை எல்லா வகையான மொழிகளிலும் வெளிப்படுத்தும் வண்ணம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்த உலக வானொலி தினத்தில் ஐக்கிய நாடுகளின் யுனெஸ்கோ அமைப்பானது மனிதகுலம் எதிர்நோக்கும் அனைத்து சவால்களையும் எதிர்கொள்வதற்காக வானொலியினுடைய சக்தியினை வளர்க்க வானொலியை கேட்கவும் உரையாடல்களை ஊக்குவிக்கவும் அனைவரையும் அழைக்கின்றது.

# நுவரெலியா மாநகர சபையை தவிர்த்து ஏனைய 11 சபைகளையும் ஆள்வோம்!

கொழும்பு, பெப்.13

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், நுவரெலியா மாநகர சபையை தவிர்த்து ஏனைய 11 சபைகளையும் ஆட்சிபுரியும்.

இதில் 13 வருடங்களுக்கு பின்பாக கொட்டகலை பிரதேசசபையை ஆட்சி ஏற்பதில் பெருமிதம் அடைகிறோம் என்றும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

ஹற்றன் நகரத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற தேர்தல் வெற்றிக்கான மக்கள் ஒன்றுகூடலின் பொது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நுவரெலியா மாவட்டத்தில் சாதனையை செய்வோம். வரலாற்று மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்ற இலக்கை முன்வைத்து தேர்தல் களத்தில் குதித்த நாம் 9 சபைகள் கிடைத்தால் போதும் என்று ஒரு வேளையில் எண்ணினோம்.

ஆனால், இன்று 11 சபைகளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆட்சி புரியும் என்பதில் எவ்வித அச்சமும் இன்றி மக்களிடம் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம் என்பதை தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றோம்.

13 வருடங்களுக்கு பின்பாக கொட்டகலை பிரதேசசபையை கைப்பற்றியுள்ள நாம் ஹற்றன் மாநகரத்தில் அபிவிருத்தி ஊடாக ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஹற்றன் நகரசபையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தான் ஆட்சிபுரியும் என உறுதியாகத் தெரிவிக்கின்றோம்.

இதற்கான ஏற்பாடுகளை செய்த வண்ணம் இந்த மக்கள் மத்தியில் நாம் வீறு கொண்டு எழுந்துள்ளோம்.



## ஆறுமுகன் தொண்டமான் பெருமிதம்

எம்மோடு கைகோத்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நுவரெலியா மாவட்ட முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.பீ. ரத்நாயக்க ஊடாக நுவரெலியா மாவட்டத்தில் காணப்படும் 12 உள்ளூராட்சி சபைகளில் நுவரெலியா மாநகர சபையை தவிர்த்து ஏனைய 11 சபைகளையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆட்சி புரியும் என்பதைத் துணிவுடன் தெரிவிக்கின்றேன்.

தலவாக்கலை நகர சபை, கொட்டகலை பிரதேச சபை, அக்கரப்பத்தனை பிரதேச சபை, நோர்வூட் பிரதேச சபை, மஸ்கெலியா பிரதேச சபை ஆகிய முக்கிய பிரதேச சபைகளை வெற்றியின் பாதையின் கீழ் ஆட்சிக்கு கொண்டு வந்த நாம் ஏனைய பிரதேச சபைளையும், ஆட்சிகொள்வோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மூர்த்தி தொண்டமான் அவர்களின் வழிகாட்டலின் கீழ் இயங்கும் மலையக மக்களின் உயர்வுக்கான இந்த கட்சிக்கு ஆதரவு தெரிவித்து நுவரெலியா மாவட்டத்தில் அபிவிருத்தியின் ஊடாக பெரும் மாற்றத்தை முன்னெடுப்போம் என உறுதியாக தனது உரையில் தெரிவித்தார்.

(க)


## பரபரப்பான சூழலில் திரும்பினார் கோட்டா

### கைது செய்யப்படுவாரா?

கொழும்பு, பெப்.12

நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் சிறிலங்கா பொதுஜன முன்னணி எதிர்பாராத வெற்றியைப் பெற்றுள்ள சூழலில், அமெரிக்கா சென்றிருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பினார்.

ஊழல் வழக்குகளில் கைது செய்யப்படக் கூடிய சூழல் ஏற்பட் டிருந்த நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்காவுக்குச் சென் றிருந்தார். அவரை ஜனாதிபதி மைத்திரியே காப்பாற்றினார் என ஐ.தே.கவினர் குற்றஞ்சாட்டியிருந்தனர்.



இதேவேளை, நாடு திரும்பும் கோட்டாபய ராஜபக்ஷ உடனடியாக கைது செய்யப்படுவார் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியிருந்தார்.

இந்த நிலையில் கோட்டாபய ராஜபக்ஷ நேற்றுக் காலை 8.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக இலங்கைக்குத் திரும்பினார்.

அமெரிக்காவிலிருந்து எமிரேஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் ஒன்றில், டுபாய் ஊடாக அவர் இலங்கை வந்தடைந்தார் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் கட்சிகள் பலத்த பின்னடைவைச் சந்தித்துள்ள நிலையில், அரசுக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளமையால், நாடு திரும்பிய கோட்டாபய ராஜபக்ஷ கைது செய்யப்படுகின்றமை சந்தேகமே என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நவுரு தடுப்பு முகாமிலிருந்து 22 அகதிகள் அமெரிக்காவில் மீள்குடியமர்த்தப்பட்டனர்!

கொழும்பு, பெப். 13

அமெரிக்கா – ஆஸ்திரேலியா இடையே ஏற்பட்ட அகதிகள் ஒப்பந்தத்தின் அடிப்படையில், நவுரு தடுப்பு முகாமிலிருந்து 22 அகதிகள் அமெரிக்காவில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

பல்வேறு கட்ட பரிசோதனைகளுக்குப் பின் தேர்வு செய்யப்பட்ட இவர்கள் நேற்று முன்தினம் அமெரிக்கா நவுருவிலிருந்து பிஜி வழியாக அமெரிக்கா வின்லொஸ் ஏஞ்செல்ஸ் நகரைச் சென்றடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் வெவ்வேறு பகுதிகளில் குடியமர்த்தப்படும் இந்த அகதிகளுக்கு முதல் 3 மாதம் அடிப்படை வசதிகள் அனைத்தும் வழங்கப்படும்.

ஓராண்டுக்குப் பின் அவர்கள் அங்கு நிரந்தரமாக தங்குவதற்கான உரிமையைப் பெறுவார்கள்.

5 ஆண்டுகள் நிறைவில் அவர்களுக்கு அமெரிக்க குடியுரிமை வழங்கப்படும் எனத் தெரிய வருகின்றது. இந்த அகதிகள் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், மியன்மார் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் என கீதஞ் Refugee Action Coalition அமைப்பைச் சேர்ந்த ஜன் ரிண்டோல் தெரிவித்துள்ளார்.

இதில் ஒரு ரோஹிங்கியா குடும்பத்தைத் தவிர மற்ற அனைவரும் ஆண்களாவர்.

கடந்த நவம்பர் 2016இல் கையெழுத்தான ஆஸ்திரேலியா – அமெரிக்கா அகதிகள் ஒப்பந்தத்தின் படி ஆஸ்திரேலிய தடுப்பு முகாமில் உள்ள ஆயிரத்து 250 அகதிகளை அமெரிக்காவில் மீள்குடியமர்த்த ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

அதே சமயம் மத்திய அமெரிக்க அகதிகளை ஆஸ்திரேலியாவில் மீள்குடியமர்த்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் சுமார் 2,000 அகதிகள் நவுரு மற்றும் மனுஸ்தீவில் உள்ள ஆஸ்திரேலியாவின் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சொந்த நாட்டில் உள்ள போர் சூழல் காரணமாக படகு வழியே ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்தவர்களாவர்.

இந்த அகதிகள் ஒப்பந்தத்தின் கீழ், இதுவரை மனுஸ் மற்றும் நவுரு தடுப்பு முகாம்களிலிருந்து சுமார் 100 இற்கும் மேற்பட்ட அகதிகள் அமெரிக்காவில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை மற்றும் செக் குடியரசுக்கிடையில் வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்தத் திட்டம்!

கொழும்பு, பெப். 13

இலங்கை மற்றும் செக் குடியரசுக்கிடையில் சரித்திர முக்கியத்துவம் மிக்க புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார மற்றும் புரிந்துணர்வுகளுக்கான கூட்டுக்குழுவின் மூலமாக இருதரப்பு வர்த்தகம் முதலீடு பொருளாதார விடயங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சர் மலிக் சமரவிக்கிரம இந்த விடயங்களில் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு திட்டமொன்றை வகுத்துள்ளார்.



அமைச்சர் மலிக் சமரவிக்கிரம செக்கோசிலோவாக்கியா வர்த்தகம் மற்றும் கைத் தொழில் அமைச்சர் மத்தியில் கடந்த 7 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்தியா மற்றும் இலங்கைக்கான செக்குடியரசின் தூதுவர் Milan Hovorka செக்கோசிலோவோக்கியா சார்பிலும் அமைச்சின் செயலாளரும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

21.Please give me a ruler தயவுசெய்து எனக்கு ஒரு அடிமட்டம் தாருங்கள

22.Please go out தயவுசெய்து வெளியே போங்கள்

23.Please stop there தயவுசெய்து அங்கே நிறுத்துங்கள்

24.Please sit down தயவுசெய்து இருங்கள்

25.Please stand up தயவு செய்து எழும்புங்கள்

26.Please be silent தயவு செய்து அமைதியாக இருங்கள்

27.Please open your book தயவு செய்து உங்கள் புத்தகத்தை திறவுங்கள்

28.Please look at the picture தயவுசெய்து படத்தை பாருங்கள்

# வினாத்தாள் 11 பகுதி- II விடைகள்

1.நண்பர்கள் ❀ ஒன்றாகப் படிக்கும் சகபாடிகள்
2.ஆசிரியர், சத்தியன், ஆதவன்
3.செய்திருப்பேன்.
4.ஓடி, வந்து.
5.நாங்கள் உங்களுக்கு துன்பங்களைச் செய்திருப்போம்.
6. நீ,கண்ணீர்
7. முற்றுப்புள்ளி,வியப்புக்குறி,மேற்கோட் குறி
8. 1. கண் 2. உள்ளம் 3.ஆசிரியர் 4. கரம்
9. 1. செய்து இருப்பேன் 2. கண் நீர்
10. நீ
(10 X 1 = 10 புள்ளிகள்)

02.
1. ஊழியர்களால்
2. முயற்சி
3. குப்பை கூளங்களால்
4. குருவிடம்
(4X2=8 புள்ளிகள்)

03.
1. நாங்கள் ஓடினோம்
2. மரங்கள் அசைந்தன
(2 X2=4 புள்ளிகள்)

04.
1. தீர்க்கதரிசி
2. நாத்திகன்
3. ஜங்குரவர்
(3 X2=6புள்ளிகள்)

05.
1. கிளறின
2. ஆரம்பமாகும்
3. குடிப்போம்
4. இருந்தன
(4X2=8 புள்ளிகள்)

06.
1. வெளித் தோற்றத்தைகண்டுஏமாறக் கூடாது
2. சிறிதெனும் சிறப்புண்டு
(2X2= 4 புள்ளிகள்)

07.
1.புகையிரதம் 2. தும்புத்தடி
(2 புள்ளிகள்)

08. பொல்ஹுச
(2 புள்ளிகள்)

09. 1. பாதுகாப்பு 2. கத்தி
(4 புள்ளிகள்)

10. 1. We are Srilankan
2.Air
(2 புள்ளிகள்)

11. (6 புள்ளிகள்) பொருத்தமான வாக்கியங் கள்
12. 310
13. 943
14. புத்துக்கள்
15. 72 பழங்கள்
16. 9m 24cm
17. 108
18. ▨ ▨ ▨ ▨ ▨
19. 40
20. 0.3
21. 28, 32,36,48
10X2= 20புள்ளிகள்)

22.
23. 1
24. 1
25. 1
26. 2
27. 3
28. 4
29. 1
30. 1
31. 2
32.-
33. 1
34. 4
35. 4
36. 2
37. 3
38. 2
39. 3
40. 1
41. 3
42. 1
43.-
44.-
45. 1
(23X1 = 23 புள்ளிகள்)
அழகான தெளிவான எழுத்து = 1 புள்ளி
100 புள்ளிகள்







வினாத்தாள் 12 பகுதி- II இன் தொடர்ச்சி...

**16. அசுத்தமான நீரைக் குடிக்கும் போது ஏற்படும் நோய்**

1. டெங்கு 2. மஞ்சட்காமாலை 3. கயரோகம் 4. பறவைக்காய்ச்சல்

**17. தேசப் படங்களில் நதிகளைக் காட்டப் பயன்படுத்தப்படும் நிறம்**

1. சிவப்பு 2. நீலம் 3. மஞ்சள் 4. கபிலம்

**18. பட்டடை பயன்படுத்தப்படுவது**

1. தச்சன் வேலைத்தளத்தில் 2. கொல்லன் கம்மாலையில' 3. வயலில் 4. சுரங்கத்தில்

**19. பிளேக் (Plague) எனும் கொள்ளைநோயைப் பரப்பும் பிராணி**

1. நுளம்பு 2. எலி 3. குரங்கு 4. நாய்

**20. உடலுக்கு சக்தி வழங்கும் உணவாக அமைவது**

1. உழுந்து 2. கடலை 3. கீரை 4. கிழங்கு

**21. கரப்பந்து விளையாட்டில் ஓர் அணியில் விளையாடுவது**

1. 6 பேர் 2. 8 பேர் 3.12 பேர் 4. 9 பேர்

**22. வாகன தடுப்பின் மின்குமிழ் நிறம்**

1. மஞ்சள் 2. செம்மஞ்சள் 3. வெள்ளை 4. சிவப்பு

**23. அதிகளவு வித்துக்களைக் கொண்ட பழம்**

1. பப்பாசி 2. மா 3. ஆனைக்கொய்யா 4. மங்குஸ்தான்

**24. பின்வருவனவற்றில் மிகச் 'சிறிய வித்து**

1. கடுகு 2. பாசிப்பயறு 3. பலா 4. மா

**25. இலங்கையின் தேசிய மரம்**

1. நாகமரம் 2. வெள்ளரசு 3. ஆல் 4.தேயிலை

**26. பின்வரும் தாவரங்களில் ஆணி வேரைக் கொண்ட தாவரம்**

1. வாழை 2. பனை 3. வேம்பு 4. தென்னை




**27. மண்ணில் சேரும் மரக்கட்டைகள், தடிகள், குச்சிகளை உக்கலடையச் செய்வது**

1. கரப்பான் 2. எலி 3. கறையான் 4. நத்தை

**28. இரவில் திரியும் பறவை அல்லாதது**

1. ஆந்தை  2. கோட்டான்  3. சாக்குருவி  4. மீன்கொத்தி

**29. சுரையை இறுக்குவதற்குபயன்படும் உபகரணம்**

1.  2.  3.  4. 

**30. வரை சில்லு பயன்படுத்தப்படுவது**

1. மட்பாண்டத் தொழில்  2. உழுவுத்தொழில்  3. விவசாயத்தொழில் 4. வயல்வேலை

**31. முலையூட்டி விலங்கு அல்லாதது**

1. அணில்  2. பசு  3. ஓணான்  4.கீரி

**32. இரவு நேரத்தில் மலரும் பூ எது?**

1. கடுபுல்  2. அலரி  3. மல்லிகை  4. அந்திமந்தாரை

**33. நுளம்புகளினால் பரவும் நோய் அல்லாதது**

1. டெங்கு  2. கழிச்சல்  3. மலேரியா  4. சிக்கன்குனியா

**34. அயலவன் குறைபாட்டினால் ஏற்படத்தக்க நோய்**

1. செங்கன்மாரி  2. தொண்டைக்கரப்பான்  3. கண்டமாலை  4. நெருப்புக்காய்ச்சல்

**35. நீர்ப்பாத்திரத்தில் இடும் போதுநீரில் மிதக்கும் பொருள்**

1. இரும்பாணி  2. கல்  3. பனிக்கட்டி  4. நாணயக்குற்றி

**36. வயல் வேலைகளின் போதுபயன்படுத்தப்படும் உபகரணம்**

1. நுகத்தடி  2. வனைசில்லு  3. வாள்  4. மணியாசு

**37. தேசிய இலச்சினையில் தார்மீகத்தைக் குறிப்பது**

1. நெற்கதிர்  2. தர்மச்சக்கரம்  3. மலரிதழ்  4. நிறைகுழசம்





**38. உப்புத்தூள் விரைவாகக் கரைவது**

1. தண்ணீரில்  2. வெந்நீரில்  3. குளிரூட்டியநீரில்  4. கொதித்தாறியநீரில்

**39. உடலை வளர்க்க உதவும் போசனை மிகுந்த உணவு**


1. பருப்பு  2. பசளிக்கீரை  3. எலுமிச்சம் சாறு  4. குரக்கல் ரொட்டி

**40. நீரை உறிஞ்சும் பொருள் அல்லாதது**

1. கடதாசி  2. காட்போட் அட்டை 3. சீலைத் துண்டு  4. றெஜிபோம் துண்டு

**41. சித்திரை மாதத்தில் பூப்பது**

1. புளி  2. கொன்றை  3. நாகமலர்  4. முள்முருக்கு




**42.** **எழுத்து A இனால் காட்டப்படும் பூவின் பகுதி**

1. அல்லி  2. குறி  3.புல்லி  4. தம்பம்

(25x1= 25 புள்ளிகள்)

## Requests

01.May I come in? நான் உள்ளே வரலாமா

02.May I go out? நான் வெளியே போகலாமா

03.May I go home? நான் வீட்டிற்கு போகலாமா

04.May I go to the toilet? நான் கழிவறைக்கு போகலாமா

05.May I go to the office? நான் அலுவலகத்திற்கு போகலாமா

06.May I go to the canteen? நான் சிற்றுண்டிசாலைக்கு போகலாமா

07.Silence Please தயவுசெய்து அமைதியாக இருங்கள்

08.Listen to me please தயவுசெய்து அவதானியுங்கள்

09.Hurry up please தயவுசெய்து விரவாக வாருங்கள்

10.Be careful கவனமாக இருங்கள்

11.Please do your home work தயவுசெய்து உங்களுடைய வீட்டு வேலையை செய்யுங்கள்

12.Please try to be clean தயவுசெய்து சுத்தம் செய்ய முயற்சியுங்கள்

13.Tell your parents உங்கள் பெற்றோரிடம் கூறுங்கள்

14.Go home straight நேராக வீட்டிற்கு போங்கள்

15.Don't shount please தயவுசெய்து சத்தம் போடாதீர்கள்

16.Please come to school every day தயவுசெய்து பாடசாலைக்கு ஒவ்வொருநாளும் வாருங்கள்

17.Please try to be good தயவுசெய்து நல்லவராக இருங்கள்

18.Please think about others தயவுசெய்து வேறு விடயங்களை யோசியுங்கள்

19.Please give me a pencil தயவுசெய்து எனக்கு ஒரு பென்சில் தாருங்கள்

20.Please give me a book தயவுசெய்து எனக்கு ஒரு புத்தகம் | தாருங்கள

# துருக்கி ராணுவ ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த்திய குர்திஷ் படையினர்





டமாஸ்கஸ்,பெப்.13

துருக்கி நாட்டுக்குச் சொந்தமான இராணுவ ஹெலிகொப்டரை சிரியாவில் உள்ள குர்திஷ் படையினர் சுட்டு வீழ்த்தினர் எனவும், இதில் இரு விமானிகள் உயிரிழந்தனர் எனவும் துருக்கி அதிபர் தாயிப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டுப் போராலும், ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கத்தாலும் நிலைகுலைந்து கிடக்கும் சிரியா நாட்டின் வடமேற்கு பகுதியில் இட்லிப் மற்றும் அருகில் உள்ள மாகாணங்களையொட்டிய தங்கள் நாட்டு எல்லைப்பகுதியில் 12 கண்காணிப்பு முகாம்களை துருக்கி அரசு அமைத்துள்ளது.

துருக்கி நாட்டு விமானப்படைக்குச் சொந்தமான போர் விமானங்கள் இங்கிருந்து புறப்பட்டுச் சென்று சிரியா அதிபரின் ஆட்சியை எதிர்த்துப் போராடிவரும் குர்திஷ் போராளிகள்மீது வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

இந்த நிலையில், சிரியாவின் வடபகுதியில் உள்ள அப்ரின் நகரில்உள்ளபோராளிகள்முகாம்கள் மீது நேற்றுமுன்தினம் துருக்கி நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 39 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலின்போது துருக்கி நாட்டுக்குச் சொந்தமான இராணுவ ஹெலிகொப்டரை குர்திஷ் படையினர் சுட்டு வீழ்த்தினர் எனவும், இதில் இரு விமானிகள் உயிரிழந்தனர் எனவும் துருக்கி அதிபர் தாயிப் எர்டோகன் தெரிவித்துள்ளார். (பு)

# ஒரு நிமிட தாமதம்; அதனால் ராஜினாமா!

## பிரிட்டன் அமைச்சரின் நேர்மை

பிரிட்டனில் நாடாளுமன்றத்திற்கு ஒரு நிமிடம் தாமதமாக வந்ததமைக்காக அமைச்சர் ஒருவர் தனது பதவியை ராஜினாமாச் செய்கிறேன் என அறிவித்துள்ளார்.

பிரிட்டனில் தெரசா மே தலைமையிலான அரசு ஆட்சி செய்து வருகிறது. இதில் சர்வதேச வளர்ச்சித்துறை அமைச்சராக பொறுப்பு வகிப்பவர் மைக்கேல் பேட்ஸ். இந்த நிலையில் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான சமஉரிமைவழங்குவது தொடர்பான விவாதம் நேற்று முன்தினம் நடைபெற்றது.



விவாதத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினரான பாரோனெஸ் லிஸ்டரின் கேள்விக்குப் பதிலளிக்க மைக்கேல் பேட்ஸ் வரவில்லை. சுமார் ஒரு நிமிடம் தாமதமாக வந்த மைக்கேல் பேட்ஸ் அரசின் சார்பில் எதிர்க்கட்சி உறுப்பினரின் கேள்விக்கு நான் உரிய நேரத்தில் பதில் அளித்திருக்க வேண்டும். ஆனால் நான் அதைத் தவறவிட்டு விட்டேன். இதற்காக நான் வெட்கப்படுகின்றேன்.

மேலும் இந்தத் தவறுக்காக நான் எனது பதவியை ராஜினாமா செய்கின்றேன் என்று கூறி உடனடியாக நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறத் தொடங்கினார். இதனால் பாரோனெஸ் லிஸ்டர் உட்பட அனைத்து உறுப்பினர்களும் அதிர்ச்சியடைந்தனர்.

தொடர்ந்து பேசிய பாரோனெஸ் அமைச்சரின் ஒரு நிமிட கால தாமதத்திற்காக அவர் மன்னிப்புக் கேட்டிருந்தாலே போதுமானது. இதற்காக அவர் பதவி விலகவேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்தார். மேலும் அமைச்சரின் ராஜினாமாவை தெரசா மே நிராகரித்தார்.

# மசூதித் தாக்குதலுக்குப் பதிலடி; 16 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை

கெய்ரோ,பெப்.13

எகிப்தில் கடந்த ஆண்டு 300இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்த மசூதித் தாக்குதலுக்குப்பதிலடியாக வடக்கு சினாய் பகுதியில் தேடுதல் வேட்டை நடத்தி 16 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என எகிப்து இராணுவம் தெரிவித்துள்ளது.




எகிப்து நாட்டின் வடக்கு சினாய் பகுதியில் உள்ள மசூதி ஒன்றில் கடந்த ஆண்டு இறுதியில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 300இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியாகினர்.

மேலும், பலர் படுகாயமடைந்தனர். இதனையடுத்து, அப்பகுதியில் இயங்கி வரும் தீவிரவாத கிளர்ச்சியாளர்கள் குழு மீது கடுமையான நடவடிக்கை எடுக்க இராணுவத்திற்கு அதிபர் அல்-சிசி உத்தரவிட்டார்.

இந்த நிலையில், அதே வடக்கு சினாய் பகுதியில் கடந்த சில நாள்களாக நடத்தப்பட்ட அதிரடி தேடுதல் வேட்டையில் 16 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் என இராணுவம் தெரிவித்துள்ளது. அத்துடன் 4 தீவிரவாதிகள் மற்றும் சந்தேகத்தின் பேரில் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (பு)

# லண்டன் விமான நிலையம் அருகே 2 ஆம் உலகப் போர்க் காலக் குண்டு!

லண்டன்,பெப்.13

லண்டன் விமான நிலையத்தின் ஓடுபாதை அருகே இரண்டாம் உலகப்போர்க் காலத்திய வெடி குண்டு கண்டுபிடிக்கப்பட்டமையால் விமான நிலையம் மூடப்பட்டது.

லண்டன் நகர விமான நிலையத்தின் அருகே தேம்ஸ் நதியில் உள்ள ஜோர்ஜ் வி டோக் என்ற கப்பல் கட்டும் தளத்தில் நேற்றுமுன்தினம் பணிகள் நடைபெற்ற போது, இரண்டாம் உலகப்போரின் போது பயன்படுத்திய வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அந்த



வெடிகுண்டு வெடிக்காத நிலையில் உயிர்ப்புடன் இருந்தது. எனவே, அசம்பாவிதம் ஏதும் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக அப்பகுதியைச் சுற்றி 214 மீற்றர் சுற்றளவுக்குப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு, அப்பகுதியில் ஆள்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக லண்டன் நகர விமான நிலையம் மூடப்பட்டது. இதற்கிடையே, தேம்ஸ் நதியில் கண்டுபிடிக்கப்பட்ட வெடிகுண்டை கடற்படை அதிகாரிகள் கைப்பற்றிப் பாதுகாப்பாகச் செயலிழக்கச் செய்தனர். (பு)

# சவுதி அரேபியா சொகுசுச் சிறை மீண்டும் ஹோட்டலாக மாற்றம்

சவுதி அரேபியாவில் முக்கிய அதிகாரிகள் மற்றும் பணக்காரர்களைக் கைது செய்து அடைத்து வைத்திருந்த சொகுசு சிறை மீண்டும் ஹோட்டல் ஆக மாற்றப்பட்டுள்ளது.

சவுதிஅரேபியாவில் பட்டத்து இளவரசராக முகமது பின் சல்மான் பதவியேற்றதில் இருந்து அங்கு அவர் நிறைய மாற்றங்கள் செய்து வருகிறார்.

சில நாளகளுக்கு முன்பு முக்கிய அதிகாரிகளுடன் வீட்டில் அதிரடி சோதனை நடத்தினர். அதில் 381 பேர் லஞ்சம் மூலம் அளவுக்கு அதிகமாக சொத்துகள் சேர்த்து இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. எனவே அவர்கள் கைது செய்யப்பட்டனர். திரிஸ்கட்லூன் என்ற சொகுசு ஹோட்டல் சிறையாக மாற்றப்பட்டு அங்கு அவர்கள் அடைக்கப்பட்டனர்.

அவர்களில் சவுதி அரேபியாவின் முக்கியமான பணக்காரரும், இளவரசருமான அல்வாலீத் பின் தலால் என்பவரும் ஒருவர். இவர் மீது ஊழல் குற்றம் சுமத்தப்பட்டது. பணமோசடி செய்ததார் எனவும், நாட்டின் பொருளாதாரத்தை சிதைத்தார் எனவும் கூறப்பட்டது.

இதற்கிடையே கைது செய்யப்பட்ட அனைவரும் ஹோட்டலில் உள்ள 492 அறைகளில் தங்க வைக்கப்பட்டனர். எனவே, அந்த ஹோட்டல் மூடப்பட்டு சிறைச் சாலையாகச் செயற்பட்டது. இந்த நிலையில் இளவரசர் அல்வாலீத் பின் தலால் விடுதலை செய்யப்பட்டார். மேலும் 325 பேர் நிபந்தனையின் பேரில் விடுவிக்கப்பட்டனர். 56 பேர் மட்டும் வேறு சிறைக்கு மாற்றப்பட்டனர். அதை தொடர்ந்து அந்த ஹோட்டல் மீண்டும் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பொலிவியா இசைவிழா முன்னேற்பாட்டில் சிலிண்டர் வெடித்து எண்மர் கருகிச் சாவு

லா பாஸ்,பெப்.13

பொலிவியாவில் நடைபெறவுள்ள இசை விழாவுக்கான முன்னேற்பாட்டின்போது, சமையல் சிலிண்டர் வெடித்துச் சிதறியதில் 8 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

லத்தீன் அமெரிக்க நாடான பொலிவியாவில் உள்ள ஒருரோ சுரங்கத் தொழில் நிறைந்த நகராகும். இங்கு பல்வேறு வண்ண உடைகள், விதவிதமான முகமூடிகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த நகரில் ஒவ்வொரு ஆண்டும் வாத்திய இசை நிகழ்ச்சி பிரமாண்டமான அளவில் நடைபெறுவது பெரும் சிறப்பாகும்.

கடந்த 2002ஆம் ஆண்டு முதல் இந்த இசைத் திருவிழா நடைபெற்று வருகிறது. இதில் பல்வேறு நாடுகளில் இருந்து இசைக் கலைஞர்கள் திரளாக பங்கேற்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் இசைக் கலைஞர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இந்த ஆண்டுக்கான இசைத் திருவிழா அடுத்த வாரம் ஆரம்பிக்கவுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகளை அரசு சிறப்பாகச் செய்து வருகிறது.



இந்த நிலையில், நேற்றுமுன்தினம் வீதியோரக் கடை ஒன்றில் சமையலுக்குப் பயன்படுத்திக் கொண்டிருந்த சிலிண்டரில் இருந்து காஸ் கசிந்து தீ விபத்து ஏற்பட்டது. அப்போது சிலிண்டர் வெடித்துச் சிதறியதில் அப்பகுதியில் இருந்த மூன்று குழந்தைகள் உட்பட 8 பேர் பரிதாபமாக உடல் கருகி இறந்தனர். மேலும், 40இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர். (பு)

# சட்டசபையில் ‘ஜெ’ படம்: உயர் நீதிமன்றில் தி.மு.க. வழக்கு

சென்னை,பெப்.13

தமிழக சட்டப்பேரவையில் ஜெயலலிதா படம் திறக்கப்பட்டதை எதிர்த்து தி.மு.க. சார்பில் உயர் நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா வின் உருவப்படம் சட்டசபையில் திறக்கப்பட்டது. நீதிமன்றத்தால் குற்றவாளியாக அறிவிக்கப்பட் டவரின் படத்தை சட்டப்பேரவையில் திறக்கக் கூடாது என தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப் புத் தெரிவித்தன. படத்திறப்பு விழாவையும் புறக்கணித்தன.

இந்த நிலையில், சட்டப்பேரவையில் ஜெயலலிதா படம் திறக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர்நீதி மன்றத்தில் தி.மு.க. மனுத் தாக்கல் செய்துள்ளது. தி.மு.க. மூத்த வழக்கறிஞர் வில்சன் தாக்கல் செய்த இந்த வழக்கை இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக தலைமை நீதிபதி அமர்வு தெரிவித் துள்ளது.

அரச அலுவலகங்களில் ஜெயலலிதா படம் திறப்பதற்கு எதிரான வழக்கு கடந்த 29ஆம் திகதி விசாரணைக்கு பட்டியலிடப்பட்ட நிலையில், விசாரணைக்கு வரவில்லை. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது எடப்பாடி அரசு சட்டப் பேரவையில் ஜெயலலிதாவின் படத்தைத் திறந்துள்ளது.



## பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் சட்டசபையில் ‘ஜெ’ படம்



சென்னை,பெப்.13

எதிர்க்கட்சிகளின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் தமிழக சட்டசபையில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் படம் திறக்கப்பட்டது.

தமிழக முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா வின் உருவப்படம் சட்டப்பேரவையில் நேற்றுத் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டு இதற்காக அனைத்து எம்.எல்.ஏ.க்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. ஆனால், சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றவாளி யாக அறிவிக்கப்பட்ட ஜெயலலிதாவின் படத்தை சட்டசபையில் திறக்கக்கூடாது என தி.மு.க. மற்றும் காங்கிரஸ் எதிர்ப்புத் தெரிவித்தன. படத்திறப்பு விழாவில் பங்கேற்கப் போவதில்லை என்றும் தெரிவித்தன.

இந்த நிலையில், ஜெயலலிதா படத்திறப்பு விழா சட்டப்பேரவையில் நேற்றுக் காலை முதல்வர் மற்றும் துணை முதல்வர் முன்னிலையில் ஜெயலலிதாவின் உருவப்படத்தை சபாநாயகர் தனபால் திறந்து வைத்தார். விழாவில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

சட்டப்பேரவையில் காந்தி, பெரியார், அண்ணா உள்ளிட்ட 10 தலைவர்களின் படங்கள் இடம் பெற்றுள்ள நிலையில், 11ஆவது தலைவராக ஜெயலலிதாவின் படம் இடம்பெற்றுள்ளது. சட்டப்பேரவையில் இடம்பெறும் முதல் பெண் தலைவர் படம் இது ஆகும்.

## திறமையாகச் செயற்பட்டு 261 பயணிகளின் உயிரைக் காப்பாற்றிய பெண் விமானிகள் !





புதுடில்லி,பெப்.13

நடுவானில் 2 விமானங்கள் நேருக்கு நேர் மோதுவதைத் தவிர்த்து, 261 பயணிகளின் உயிரை காப்பாற் றிய பெண் விமானிகளுக்கு பாராட்டுக் கள் குவிந்து வருகின்றன.

டில்லியில் இருந்து புனேவுக்கு விஸ்டாரா ஏ – 320 நியோ என்ற விமானம் கடந்த 7ஆம் திகதி சென்று கொண்டிருந்தது. அந்த விமானம் 29ஆயிரம் அடி உயரத்தில் பறக்க, கட்டுப்பாட்டு அறையில் இருந்து அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் அந்த விமானத்தின் விமானி, 27ஆயிரம் அடி உயரத் தில் விமானத்தை இயக்கி உள்ளார். அதே நேரத்தில், அதே உயரத்தில் எதிர்த்திசையில் மும்பையில் இருந்து போபால் செல்லும் ஏர் இந்தியா விமா னம் வந்து கொண்டிருந்தது.

இரண்டு விமானங்களிலும் மொத்தம் 261 பயணிகள் பயணம் செய்துள்ளனர். இரு விமானங்க ளும் நேருக்கு நேர் வந்த போது எச்ச ரிக்கை கருவிகள் சத்தம் எழுப்பின. பின்னர் தவறை உணர்ந்த விமா னிகள் உடனடியாக விமானத்தை வேறு பக்கமாகத் திருப்பினர். சில நொடிகளில் நடந்த இந்த நிகழ்வால் பெரும் விமான விபத்து தவிர்க் கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக விமான விபத்துக்கள் பற்றி விசா ரிக் கும் ஆணையம் விசாரித்து வருகின் றது.

இதற்கிடையில், சம்பவம் நடந்த போது பெண் விமானிகளே இரண்டு விமானங்களையும் இயக்கியமை தெரியவந்துள்ளது.

இடது பக்கத்தில் இருந்து விஸ் தாரா விமானம் நெருங்கியதைக் கண்ட அவர்கள் சமயோசிதமாக செயற்பட்டு தங்களது விமான உயரத் தை உயர ஏற்றி உள்ளனர். விஸ்டாரா என்ற விமானி விமானம் மோதாமல் செல்ல வழி ஏற்படுத்திக் கொடுத் துள்ளனர். இது தொடர்பாக அவருக் குப் பாராட்டுக்கள் குவிந்து வருகின் றன. (பு)

## தாஜ்மஹாலுக்கு ஆளில்லா விமானம் எடுத்துச் சென்றால் சிறைத் தண்டனை

ஆக்ரா,பெப்.13

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ் மஹாலைப் பார்க்க வருபவர்கள் ஆளில்லா விமானம் எடுத்துச்சென்றால் சிறைத் தண்ட னை வழங்கப்படும் என ஆக்ரா பொலிஸ் அத்தியட்சகர் கன்வர் அனுபம்சிங் எச்சரிக் கை விடுத்துள்ளார்.

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்ம ஹால் உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ராவில் யமுனை நதிக்கரையில் உள்ளது. இதை கண்டு ரசிக்க உலகம் முழுவதும் இருந்து சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

அவர்கள் உலக பாரம்பரிய சின்னமான தாஜ்மகாலுக்கு உள்ளேயும், அதை சுற்றி யுள்ள பகுதிகளிலும் ஆளில்லாமல் பறக்க கூடிய டிரோன்ஸ் எனப்படும் மிகச் சிறிய விமானங்கள் பயன்படுத்தத் தடை விதிக் கப்பட்டுள்ளது.

கடந்த 2017ஆம் ஆண்டு தாஜ்மஹாலைச் சுற்றி 20 தடவை பறந்த ஆளில்லா விமா னம் ஒன்று பறிமுதல் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து இத்தடை கொண்டு வரப் பட்டது.

இதை மீறி ஆளில்லா விமானம் பறக்க விடுபவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என்றும் எச்சரிக்கை விடப்பட்டது. இந்த நிலையில் விடுமுறை நாளான நேற்று ஆளில்லா விமானம் பறக்க விட்டது கண்டு பிடிக்கப்பட்டது. இந்த நிலையில் தாஜ்ம ஹால் பார்க்க வருபவர்கள் ஆளில்லா விமா னம் எடுத்து சென்றால் சிறைத் தண்டனை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## பாபர் மசூதி இடத்தை விட்டுத்தர மாட்டோம்

### முஸ்லிம் தனிநபர் சட்டசபை

ஐதராபாத்,பெப்.13

பாபர் மசூதி இடத்தை விட்டுத் தர மாட்டோம் என முஸ்லிம் தனிநபர் சட்ட சபை தெரிவித்துள்ளது.

பாபர் மசூதி இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களது நம்பிக்கையின் முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. அதை ஒருபோதும் விட்டுக் கொடுக்க ம ாட்டோம். பாபர் மசூதி கட்ட வேறு இடம் ஒதுக்கித் தந்தாலும் ஏற்கமாட்டோம். அந்த இடம் கடைசி வரை ஒரு மசூதியாகவே இருக்கும். இடித்து விட்டாலும் பாபர் மசூதி தனது அடையாளத்தை ஒருபோதும் இழந்து விடாது. ஷரியத் சட்டத்தின்படி அது ஒரு மசூதியாகவே நீடிக் கும். இடிக்கப்பட்ட இடத்தில் பாபர் மசூதி கட்டுவதற்கான போராட்டம் தொடரும். நடைபெறும் வழக்கில் பிரபல வழக்கறிஞர்கள் முஸ்லிம்களுக்காக வாதிடுவார்கள். முஸ்லிம் பெண்கள், ஷிரியத் சட்டம் மற்றும் அரசியல் சாசனம் ஆகியவற்றுக்கு முத்தலாக் சட்ட பிரேரணை முற்றிலும் எதிரானது. அதை நாடாளுமன்ற மாநிலங் களவையில் நிறைவேறவிடாமல் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்று தெரிவித்துள் ளார். (பு)



## உலகில் பணக்கார நகரங்கள்; 12ஆவது இடத்தில் மும்பை!

உலக அளவில் பணக்கார நகரங்கள் பட்டியலில் மும்பை 12ஆவது இடத்தில் உள்ளது. மும்பையில் வாழும் தனிநபர்களின் ஒட்டுமொத்த சொத்து மதிப்பு 95 ஆயிரம் கோடி டொலராகும்.

ஆய்வு நிறுவனமான நியூ வேர்ல்ட் வெல்த் சர்வதேச அளவில் செல்வச் செழிப்பு மிக்க 15 நகரங்களை வரிசைப் படுத்தி பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளது. ஒவ் வொரு நகரத்திலும் வசிக்கும் அனைத்து தனிநபர்களின் ஒட்டுமொத்த சொத்து மதிப்பு அடிப்படையில் இந் தப்பட்டியல் தயாரிக்கப்பட் டுள்ளது. இதில் இந்தியாவின் பொருளாதார தலைநகரான மும்பை 12ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

நியூ வேர்ல்ட் வெல்த் நிறுவனத்தின் 15 பணக்கார நகரங்கள் பட்டியலில் நியூ யோர்க் முதலிடத்தில் உள் ளது. லண்டன் இரண்டாவது இடத்திலும், ரோக்கியோ மூன் றாவது இடத்திலும் உள்ளன. சன் பிரான்சிஸ்கோ, பீஜிங், ஷாங்காய் முறையே 4, 5 மற்றும் 6ஆவது இடங்களில் இருக்கின்றன.

அடுத்து லொஸ் ஏஞ்சல்ஸ், ஹொங்கொங், சிட்னி , சிங் கப்பூர் , சிக்காக்கோ ஆகிய நகரங்கள் உள்ளன. அதனைத் தொடர்ந்து மும்பை 12 ஆவது இடத்தில் உள்ளது. (ப)



# 2 ஆவது ஒருநாள் போட்டித் தொடர் ஆப்கனை வீழ்த்தியது ஸிம்பாப்வே

ஆப்கானிஸ்தானுடனான இரண்டாவது ஒருநாள் போட்டியில் 154 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஸிம்பாப்வே அணி வெற்றி பெற்றது.

ஸிம்பாப்வே, ஆப்கானிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான இரண்டு ரி-20 போட்டிகள் மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் ஷார்ஜாவில் நடைபெற்று வருகிறது. முதலில் நடந்த ரி-20 தொடரில் இரண்டு போட்டிகளிலும் ஆப்கானிஸ்தான் வென்று தொடரைக் கைப்பற்றியது.

இதையடுத்து, இரு அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டியில் 154 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஸிம்பாப்வே அணியை ஆப்கானிஸ்தான் வீழ்த்தியது.

இந்த நிலையில், ஸிம்பாப்வே மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் ஷார்ஜாவில் நடைபெற்றது.

ஸிம்பாப்வே அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. இறுதியில், ஸிம்பாப்வே அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 333 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஆப்கானிஸ்தான் அணி சார்பில் ரஷீத் கான் 2 விக்கெட்டுகளும், முஜிப் சட்ரான், கல்பாடின் நயிப் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதைத்தொடர்ந்து, 334 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கியது. அந்த அணியில் ரஹ்மத்ஷா 43 ஓட்டங்களும், மொகமது நபி 31 ஓட்டங்களும், தவ்லத் சட்ரன் 47 ஓட்டங்களுடனும் ஓரளவு ஆடினர். மற்றவர்கள் ஸிம்பாப்வே அணியினரின் பந்துவீச்சில் சிக்கிச் சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தனர்.

இறுதியில், ஆப்கானிஸ்தான் அணி 30.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 179 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதனால் ஸிம்பாப்வே அணி 154 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஸிம்பாப்வே அணி சார்பில் கிரீமர் 4 விக்கெட்டுகளையும், சடாரா 3 விக்கெட்டுக்களையும், முசாரபானி 2 விக்கெட்டுகளையும், பிரியன் விடோரி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

(ப)

# முதலிடத்தை பிடிக்கும் முனைப்பில் பெடரர்

நெதர்லாந்தின் ரோட்டர்டாம் நகரில் சர்வதேச டெனிஸ் போட்டியில் ஆட இருக்கும் பெடரர் இந்தத் தொடரில் அரைஇறுதியை எட்டினால் மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறுவார்.

நெதர்லாந்தின் ரோட்டர்டாம் நகரில் சர்வதேச டென்னிஸ் போட்டி நேற்று ஆரம்பமாகியது. சமீபத்தில் ஆஸ்திரேலிய ஓபனில் பட்டம் வென்று அசத்திய சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர் இந்தப் போட்டியில் பங்கேற்கிறார். முதல் சுற்றில் தகுதி நிலை வீரர் ருபென் பிமெல்மான்சை (பெல்ஜியம்) எதிர்கொள்கிறார். வாவ்ரிங்கா (சுவிற்ஸர்லாந்து), கிரிகோர் டிமிட்ரோவ் (பல்கேரியா), அலெக்சாண்டர் ஸ்வெரேவ் (ஜேர்மனி) ஆகிய முன்னணி வீரர்களும் களம் இறங்குகிறார்கள்.



தற்போது உலக தரவரிசையில் 2 ஆவது இடத்தில் உள்ள 36 வயதான ரோஜர் பெடரர், இந்தத் தொடரில் அரைஇறுதியை எட்டினால் நடாலை (ஸ்பெயின்) பின்னுக்குத் தள்ளிவிட்டு மீண்டும் முதலிட அரியணையில் ஏறி விடுவார். அவ்வாறு நிகழ்ந்தால், அதிக வயதில் முதல் இடத்தைப் பிடித்த வீரர் என்ற மகத்தான பெருமைக்கும் சொந்தக்காரர் ஆகி விடுவார்.

# கப்டனுக்கு 20 வீதம் வீரர்களுக்கு 10 வீதம்

## அபராதம் விதிப்பு



ஜோகன்னஸ்பேர்க் 4ஆவது ஒருநாள் போட்டியில் மெதுவாகப் பந்து வீசியதற்காக தென்னாபிரிக்கா வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா-தென்னாபிரிக்கா இடையிலான 4ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஜோகன்னஸ்பேர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி கப்டன் விராட் கோஹ்லி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். தவான் 109 ஓட்டங்களும், விராட் கோஹ்லி 75 ஓட்டங்களும், டோனி 42 ஓட்டங்களும் எடுக்க இந்தியா 50 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 289 ஓட்டங்கள் சேர்த்தது.

தென்னாபிரிக்கா மோர்னி மோர்கல், ரபாடா, கிறிஸ் மோரிஸ், நிகிடி, பெலுக்வாயோ ஆகிய ஐந்து வேகப்பந்து வீச்சாளர்களுடன் களம் இறங்கியது. இந்த ஐந்து பேரும் இணைந்து 46 ஓவர்கள் வீசினார்கள். சுழற்பந்து வீச்சாளர் டுமினி நான்கு ஓவர்கள் வீசினார்.

ஐந்து வேகப்பந்து வீச்சாளருடன் களம் இறங்கிய தென்னாபிரிக்கா குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்து வீச முடியவில்லை. ஒரு ஓவர் குறைவாக வீசியதால் போட்டி நடுவர், தென்னாபிரிக்க கப்டன் மோர்கிராமிற்கு போட்டிச் சம்பளத்தில் இருந்து 20 வீதமும், மற்ற வீரர்களுக்கு தலா 10 வீதமும் அபராதமாக விதித்துள்ளார்.

இன்னும் 12 மாதத்திற்குள் இதுபோன்ற சம்பவம் நடைபெற்றால், அதில் மோர்கிராம் கப்டனாகச் செயற்பட்டால் தடைக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்படும்.

இந்தியா - தென்னாபிரிக்கா இடையிலான 5ஆவது போட்டி இன்று போர்ட் எலிசபெத்தில் இடம்பெறவுள்ளது.

# ஐ.பி.எல். போட்டிகள் மூலமாக ரூ.12,000 கோடி வருமானம்

இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல். போட்டிகள் மூலம் பி.சி.சி.ஐ இற்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் வருவாயாகக் கிடைத்துள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நடத்தும் ஐ.பி.எல். எனப்படும் இந்தியன் பிரீமியர் லீக் போட்டிகள் வருடா வருடம் பிரபலமடைந்து வருகிறது.

இந்த ஆண்டு சென்னை சூப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ் போன்ற அணிகள் மீண்டும் களமிறங்கவுள்ள நிலையில் ஒவ்வொரு அணிகளும் கோடிக் கணக்கில் செலவு செய்து வீரர்களை விலைக்கு வாங்கியுள்ளது.

உலக அளவில் பணக்கார சபையாக அறியப்படும் பி.சி.சி.ஐ. கடந்த 10 ஐ.பி.எல். சீசனில் மட்டும் 12 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் ஈட்டியுள்ளது. இந்தத் தகவலைச் சேகரித்த இந்திய வருமான வரித்துறை, வரி செலுத்தக் கோரி பி.சி.சி இற்கு நோட்டீஸ் அனுப்பி வரி வசூலித்தது.

ஆனால், 30 வீதம் வரி அதிகம் வசூலிக்கப்பட்டது எனவும் அந்த வரியில் சலுகை வேண்டும் என்றும் வருமானவரி ஆணையம் மற்றும் மும்பை உயர்நீதி மன்றில் பி.சி.சி.ஐ. வழக்குத் தொடர்ந்துள்ளது.

(ப)



# ரொனால்டோ ஹட்ரிக் கோல் உற்சாகத்தில் ரியல் மட்ரிட்

லா லிகா தொடரில் ஹாட்ரிக் கோல் அடித்ததன் மூலம் பி.எஸ்.ஜி இற்கு எதிரான போட்டியை எதிர் கொள்ள ரியல் மட்ரிட் அணிக்கு புதிய உற்சாகம் ஏற்பட்டுள்ளது.

லா லிகா உதைபந்துத் தொடரில் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் ரியல் மாட்ரிட் – ரியல் சோசியேரட் அணிகள் மோதின. இந்த சீசனில் ரியல் மாட்ரிட் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. ரொனால்டோ கோல் அடிக்காமல் திணறி வந்தார்.

இந்த ஆட்டத்தில் கிறிஸ்டியானோ ரொனால்டோ சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆட்டத்தின் முதல் நிமிடத்தில் லூகாஸ் வாஸ்குயஸ் கோல் அடிக்கத்துணை புரிந்தார். அதன்பின் 27, 37 மற்றும் 80ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். மேலும் அந்த அணியின் டோனி க்ரூஸ் 34 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

முதல் பாதி நேரத்தில் 4:0 என ரியல் மட்ரிட் முன்னிலை பெற்றிருந்தது. 2ஆவது பாதி நேரத்தில் ரியல் சோசியேரட் அணி இரண்டு கோல்கள் ரியல் மாட்ரிட் அணி ஒரு கோலைப் பெற ரியல் மாட்ரிட் 5:2 என வெற்றி பெற்றது.

சம்பியன்ஸ் லீக்கில் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் ரியல் மட்ரிட் முதல் லெக்கில் பி.எஸ்.ஜி. அணியை வருகிற 15ஆம் திகதி எதிர்கொள்கிறது. முக்கியமான இந்தப் போட்டிக்கு முன்பு கிறிஸ்டியானோ ரொனால்டோ பழைய நிலைக்குத் திரும்பியமை அந்த அணிக்கு உற்சாகத்தை அளித்துள்ளது.

## தமிழின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கும் பகையுணர்ச்சியும், அதனால் நம் தமிழ்ச் சமூகத்தின் ஒற்றுமைக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவுகளும், நம் இனத்தின் எதிர்காலம் என்னாகப்போகிறதோ? எனும் அச்சத்தை விளைவித்திருக்கின்றன.

பெரும்பான்மையான பேரினத்தார் இன்னும் தமிழ்மக்கள் மீதான தம் வெறுப்பை மாற்றவில்லை என்பதை, வெளிவந்திருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் தெளிவாக இனங்காட்டியிருக்கின்றன.

தமிழ் மக்களின் பிரச்சினையை அங்கீகரித்து, உலக அரங்கில்அதைஒத்துக்கொண்டு, தீர்வு முயற்சியில் ஈடுபட்ட புதிய ஜனாதிபதியும் பிரதமரும் அவர்களது கட்சிகளும், இத்தேர்தலில் சிங்கள மக்களால் புறந்தள்ளப்பட்டு, கடும் போக்குவாத அரசியல் அணிகள், சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்று நிமிர்ந்திருக்கின்றன.

இத்தேர்தல் முடிவை வைத்துக் கணிப்பிடுவதானால், அடுத்து இந்நாட்டில் அமையப் போகும் ஆட்சி இனப்பிரச்சினை தீர்வுக்குச் சார்பானதான இருக்காது என்பதை நிச்சயப்படுத்தலாம் போல் தெரிகிறது.

அங்ஙனம் அமையுமாயின் தமிழினத்திற்கான தீர்வுத்திட்டம் என்பது, வெறுங் கனவாகத்தான் அமையும் என்பதில் ஐயமில்லை. தமிழினம் நோக்கி சுனாமியாய்த் திரும்பியிருக்கும் இவ் ஆபத்தை அரசியலில் ஈடுபட்டிருக்கும் தமிழ்த் தலைவர்களாகிய நீங்கள் நிச்சயம் எங்களைவிட, நன்கு அறிவீர்கள் என நாம் நம்புகிறோம்.

இறுதிப்போரில் உயிர், உணவு,உடைமைஎனஅனைத்தாலும், கணக்கிடமுடியாத இழப்புக்களைச் சந்தித்து, ஏதிலிகளாய் அதிர்ந்து நின்ற நம் மக்கள், உலகம் நம்மில் காட்டிய அனுதாபத்தைப் பயன்படுத்தி, அதனைக்கருவியாய்க்கொண்டு, நம் இனத் தலைவர்களான நீங்கள் ஒருமித்து, நம் இனத்தின் உரிமைகளை மீட்டெடுப்பீர்கள் எனும்நம்பிக்கைகொண்டதால்த்தான், ஏகத்தலைமை என்ற அங்கீகாரத்தை உங்களுக்கு வழங்கினர்.

மற்றைய தமிழ்த் தலைவர்களையும் பகை மறந்து இணைத்து, உங்களைப் பலப்படுத்தி ஒருமுகமாக நின்று பேரினத்தாரோடு உலக அரங்கில் பேசுவீர்கள் என்ற எமது மக்களின் நம்பிக்கை, துரதிஷ்டவசமாகப் பொய்த்துப் போனது.

போர் முடிந்து கடந்த எட்டு வருடங்களில், தமிழ்க்கட்சிகள் அனைத்தும், தம்முள் பகை வளர்த்துக் கொண்டு மேலும் மேலும் பிளவுபட்டனவேயன்றி, தமிழினத்தின் நன்மை நோக்கி ஒருமைப்பாட்டுடன் ஓர் அடியைத்தானும் எடுத்து வைக்காததைக் கண்டு, நம் மக்கள் மிகவும் மனம் வருந்தி நிற்கின்றனர்.

போருக்குப் பின்னான இக் குறுகிய காலத்தில், ஏற்பட்டதான பகையும் பதவி மோகமும், தமிழ்க்கட்சிகளின் ஒற்றுமையை சிதைத்ததை அனைவரும் கவனித்தனர். புதிய நல்லாட்சி அரசாங்கம் காட்டிய ஓரளவான மென்போக்கின் மீதான நம்பிக்கையில், சில அமைப்புக்கள் இனப்பகையை வளர்க்கும் செயற்பாட்டில் இயங்கி, யதார்த்தமின்றி மக்களை வரலாற்றுப் பாதையில் பின்னோக்கித் திசை திருப்பவும் முயன்றன. இவையெல்லாம் கட்சிப்பிளவுகளால் ஏற்பட்ட பின்விளைவுகளே.

நடந்ததவை நடந்ததவையாகட்டும். இனியும் ஒருவர் தோல்வியில் மற்றவர் மகிழ்ந்து, மேலும் மேலும் பிளவுகளை உருவாக்கி நீங்கள் இயங்கத் தலைப் பட்டால், தற்போது தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் பெரிய அரசியல் மாற்றத்தின் விளைவுகளுக்கு, நம் இனம் பலியாகப்போவது திண்ணம்.

இவ் உண்மையைநீங்களும் ஓரளவு உணர்ந்து விட்டீர்கள் என்பதை, தேர்தல் முடிவுகளுக்குப் பின்னான உங்களின் அறிக்கைகள் நிரூபணம் செய்கின்றன. அனைவரும் இறங்கி வர முன்வந்திருக்கும் இந் நிலையில், பழையவற்றைக் கிளறாமல் இனநன்மை நோக்கி, நீங்கள் அனைவரும்ஒன்றுபட்டு, ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து ஒரே குரலாக, இனியேனும் பேச முன்வரவேண்டும் என, சமூக அக்கறை கொண்ட தமிழினப் பிரஜைகள் என்ற அடிப்படையில், எந்தவித அரசியல்நோக்கமும் இல்லாமல், ஒருமித்து நாம் கோரிக்கை விடுக்கிறோம்.

தன்மானம் நோக்கியோ, தம் கட்சி நலன் நோக்கியோ ஒருவரோடொருவர் முரண்படாமல், எதிர்கால இனநலனை மட்டும் மனங்கொண்டு, திறந்த மனப் பான்மையோடு பேச்சுவார்த்தை நடத்தி, ஏகத்தலைமை என்ற பிரயோகத்தின் உண்மை அர்த்தத்தை உண்டாக்கி, தமிழினத்தின் நலன் காக்க முன் வரவேண்டுமென, நாம் அனைவரும் ஒருமித்து தமிழ் மக்கள் சார்பாக உங்களை வேண்டி நிற்கிறோம்.

அங்ஙனம் பேசும் பட்சத்தில் ஏற்படக்கூடிய இடையூறுகளை அகற்ற, எம்மாலான பங்களிப்பை நல்கவும் நாம் தயாராக இருக்கிறோம் என்பதனையும் தங்களுக்குத் தெரியத் தருகிறோம்.

வரலாற்றுப் பேரழிவின் பின்னதான நிர்வாக முயற்சியில் தடுமாற்றங்கள் ஏற்படுவது இயல்பானதே, அத் தடுமாற்றங்களை பகையாய்ப் பதிவு செய்து, இனப்பிளவை மேலும் மேலும் வளர்ப்பதன் மூலம், நம் உரிமை நோக்கிய பயணத்தின் தடைக்கல்லை, நாமே உருவாக்கிக் கொள்ளக்கூடாது என்பதை, பொறுப்புள்ள சமூகப் பிரஜைகள் என்ற வகையில், மீண்டும் மீண்டும் தமிழ்ச் சமூகத்தின் சார்பாக தெரியப்படுத்தி, எங்கள் கோரிக்கைக்கான நல்ல பதிலை, அனைத்துக் கட்சிகளிடமும் எதிர்பார்த்து நிற்கிறோம். – என்றுள்ளது.

இதில்உள்ளடங்கியுள்ளதமிழ் சமூகப் பிரமுகர்களின் விவரம் வருமாறு:–

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன், அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார், சிவஸ்ரீ. சோ. ரவிச்சந்திரக் குருக்கள் (ஆதீனகர்த்தா – திருமலை பத்திரகாளி தேவஸ்தானம்), கம்பவாரிதி இ. ஜெயராஜ், கலாநிதி ஆறு. திருமுருகன், எழுத்தாளர் அருள் சுப்பிரமணியம் (தலைவர் – திருக்கோணேஸ்வரம்), பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை (முன்னாள் துணைவேந்தர்), பேராசிரியர். அ. சண்முகதாஸ், பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கவிஞர் சோ. பத்மநாதன், எழுத்தாளர் தெணியான், டாக்டர். கு.ஸ்ரீரத்தினகுமார் (தலைவர் அ.இ. கம்பன் கழக நம்பிக்கைப் பொறுப்பு), கவிஞர் த.சிவசங்கர் (கம்பன் கழகம்), கலாநிதி ஸ்ரீ. பிரசாந்தன் (கம்பன் கழகம்), பொறியியலாளர் செ. சொபிசன் (கம்பன் கழகம்), ஆசிரியர் அ. வாசுதேவா (கம்பன் கழகம்), ஐ.தயானந்தராஜா (ஓய்வுநிலை அதிபர், யாழ். இந்துக்கல்லூரி), ச.சிவனேஸ்வரன் (ஓய்வுநிலை அதிபர் மானிப்பாய் இந்துக் கல்லூரி) கலாநிதி செ. சேதுராஜா (ஓய்வுநிலை அதிபர், நெல்லியடி மத்தியகல்லூரி), இ. சர்வேஸ்வரா (சிரேஷ்ட உதவிப் பதிவாளர், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகம்), தென்மராட்சி இலக்கிய அணியினர். (ஐ)

## சிக்கலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளும், பட்டியல் ரீதியில் 4 ஆசனங்களும் கிடைத்துள்ளன. வட்டார ரீதியில் கிடைத்த 9 ஆசனங்களுக்கும் ஆண்களே தெரிவாகியுள்ளனர். இதனால் பெண்களுக்கான 25 வீத ஆசன ஒதுக்கீடு என்பதன் அடிப்படையில் 13 ஆசனங்களில் 4 ஆசனங்கள் பெண்களுக்கு வழங்கப்படவேண்டும். இதனால் பட்டியல் மூலம் கிடைத்த 4 ஆசனங்களுக்கும் பெண்களையே நியமிக்கவேண்டியுள்ளதால் சட்டத்தரணி மணிவண்ணன் உறுப்பினராவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

மணிவண்ணன் உறுப்பினராக வேண்டுமானால் ஏற்கனவே வட்டாரத்தில் தெரிவான உறுப்பினர் ஒருவர் பதவியைத் துறக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## போட்டியிட்டுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளவர்களைத் தான் நியமிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

கூட்டமைப்பின் சார்பில் வட்டார ரீதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த பலர் பட்டியல் மூலம் உறுப்பினராவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் எனவும், ஆயினும் அவ்வாறு தோல்வி கண்டவர்களைப் பட்டியல் மூலம் உறுப்பினராக்குவதில்லை என்பதில் கூட்டமைப்பு திடமான முடிவில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## எனக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடு திரும்பியபோது விமான நிலையத்தில் வைத்துக் கேள்வி எழுப்பினார் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ.

அமெரிக்காவில் இருந்து நேற்றுக் காலை நாட்டுக்குத் திரும்பிய போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி மீண்டும் தேவையென்பதை நாட்டு மக்கள் தேர்தல் மூலம் நிரூபித்துள்ளனர்.

பொய்ப் பிரசாரங்களை நம்பி ஏமாந்த மக்கள் அன்று ஜனாதிபதியாக மஹிந்த நாட்டுக்குச் செய்த சேவைகளை 3 வருடங்களின் பின்னர் உணர்ந்து இன்று மஹிந்தவின் ஆட்சி நாட்டுக்குத் தேவையென்பதை நிரூபித்துள்ளனர்.

நான் அமெரிக்கப் பிரஜையென்பதால் எவ்வாறு பிரதமர் பதவியை வகிக்க முடியும். அதை நீங்கள் மஹிந்தவிடமே வினவவேண்டும். – என்றார். (ஐ)

## தீர்வுக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு நேற்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமான இரா சம்பந்தன்.

உள்ளூராட்சித் தேர்தலில் மஹிந்த தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெரும் எழுச்சி பெற்று தெற்கில் பெரும்பாலான சபைகளைக் கைப்பற்றியுள்ள நிலையில் சம்பந்தன் இந்த அழைப்பை விடுத்திருக்கிறார்.

திருமலையில்உள்ள அவரது இல்லத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு –

ஒரு பலமான அதிகார ஆட்சி எமது மாவட்டங்களில்வடக்கு – கிழக்கில் ஏற்படவேண்டும். அவ்விதமானஒருபலமானஆட்சியை ஏற்படுத்துவதற்கு நாங்கள் மற்றவர்களுடன் சேர்ந்து இயங்க வேண்டி இருந்தால் அதற்குப் பின்னிற்கமாட்டோம்.

மக்களின் நலன் கருதி – மக்களுக்கு நாங்கள் ஆற்றவேண்டிய தேவை கருதி ஒற்றுமையை ஊக்குவித்து அதிகாரம் உள்ள ஓர் ஆட்சியை அமைப்பதற்கு எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.

ஆனால் எந்தக் கட்சியுடன் நாங்கள் கூட்டுச்சேர்வது என்பது பற்றிக் கவனமாக ஆலோசிப்போம். எமது கொள்கைக்கு மாறான கட்சிகளுடன் கூட்டுக்கு இடமில்லை.

தேசிய அரசுக்கும் மஹிந்த ராஜபக்ஷவின் கொள்கைக்கும் சம்பந்தமில்லை. தேசிய அரசு தனது கொள்கையின் அடிப்படையில் தன்னால் ஆரம்பிக்கப்பட்ட பணிகளைத் தொடர வேண்டும்.

ராஜபக்ஷவின்அனுமதியைப் பெற்று தேசிய அரசு நிறுவப்படவில்லை. கணிசமான அளவு தூரம் பயணம் செய்து விட்டு அது முடிவடைய முதல் அதில் எந்தவிதமான மாற்றமும் இருக்கமுடியாது.

மஹிந்தவை நாம் வரவேற்கிறோம். அவரை நாங்கள் எதிரியாக கருதவில்லை. இது பற்றி நான் நாடாளுமன்றத்திலும் கூறியுள்ளேன். நீங்கள் மக்களிடத்தில் ஒரு மதிப்புப் பெற்ற தலைவர். ஒரு நல்ல கருமத்தை நாட்டுக்காகநிறைவேற்றஉங்கள் ஒத்துழைப்பு எங்களுக்குத் தேவை. அந்த ஒத்துழைப்பை நீங்கள் நல்க வேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம்.

இந்தத் தேர்தல் வெற்றி மஹிந்தவின் கரங்களை மேலும் பலப்படுத்தியுள்ளது. எனவே அவர் தனது ஒற்றுமையைவெளிப்படுத்தவேண்டும். இந்தத் தேசியப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். இதனைத் தீர்ப்பேன்என்றுஅவர்ஏற்கனவே சர்வதேசத்துக்குஉறுதியளித்துள்ளார். அந்த வாக்குறுதியை மஹிந்த நிறைவேற்ற வேண்டும். – என்றார்.

இந்தக்கூட்டத்தில் முன்னாள் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டவர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## கேப்பாபிலவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு எதிராக முள்ளியவளை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று முல்லைத்தீவுமாவட்ட நீதிமன்றில் நடந்த போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கேப்பாபிலவுக் கிராமத்தை மீட்பதற்காகக் கடந்த வருடம் மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த நிலமீட்புப் போராட்டம் 349 ஆவதுநாளாகவும் தொடர்கிறது.

அங்கு இன்னமும் விடுவிக்கவேண்டியுள்ள 104 குடும்பங்களுக்கு சொந்தமான 181 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு கோரி மக்கள் போராடி வருகின்றனர்.

கடந்த 4 ஆம் திகதி இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினத்தன்று கேப்பாபிலவு மக்கள் கறுப்புக் கொடிகளுடன் போராட்டம்நடத்தினர். இதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. இதனை அடுத்து கேப்பாபிலவு மக்கள் 5 பேர்மீது முள்ளியவளை பொலிஸாரால் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது கேப்பாபிலவு மக்கள் சார்பில் சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன், பரஞ்சோதி உள்ளிட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் முன்னிலையாகி வாதிட்டனர்.

வழக்கு விசாரணைகளின் பின்னர், எதிர்காலத்திலும் கேப்பாபிலவு மக்கள் ஜனநாயக உரிமைக்காகப் போராடலாம் என்றும், மக்கள் பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடாது போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்றும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எஸ்.லெனின்குமார் உத்தரவிட்டார். (ஐ – 81)

## ஐ.தே.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று மதியம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில் –

ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு– கிழக்கு மாகாணங்களில் 1000 பௌத்த விகாரைகள் அமைப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்காக 50 கோடி ரூபாஒதுக்கப்பட்டுஉள்ளதாவும் குறிப்பிட்டுள்ளது,

நாட்டில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் இவ்வாறான செயற்பாடுகள் தேவையற்ற ஒன்று. வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இந்து , கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மக்களே வாழ்கின்றனர். பௌத்த மதத்தைச் சார்ந்தவர்கள் மிக மிக குறைவாகவே உள்ளனர். இந்நிலையில் வடக்கு – கிழக்கில் புதிதாக 1000 விகாரைகள் அமைக்க வேண்டிய தேவையில்லை. அது நல்லிணக்கமும் இல்லை.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டு உள்ள விகாரை அமைப்பு தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளேன். குறித்த முறைப்பாடு இன்று (நேற்று) திங்கட்கிழமை காலையில் மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிடவில்லை. இனிவரும் காலங்களிலாவது இப்படி நடக்காமல் பார்க்கவேண்டும் என்று கோருகின்றோம். மதத்தைப் பயன்படுத்தி ஊடக அறிக்கைகள் வெளியிட்டமை தொடர்பிலும் முறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. – என்றார்.

# ஜனாதிபதியின் நடவடிக்கைகளே அரசு மீதான அதிருப்திக்கு காரணம்



**அமைச்சர் பழனி திகாம்பரம் கூறுகிறார்**

கொழும்பு, பெப். 13
தன்னை தவறற்றவர் எனக் காட்டிக்கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரி மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளுமே அரசின் மீதான அதிருப்திக்கு காரணம் என அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் தொடர்பாக அவர் விடுத்திருக்கும் அறிக்கையிலேயே மேற்படி கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

தொழிலாளர்கள் தமது ஊழியர் சேமலாப நிதி சூறையாடப்பட்டுவிட்டதான பிரசாரத்திற்கு அஞ்சிவிட்டனர்.

கடந்த மூன்றாண்டு காலமாக நல்லாட்சி அரசு பல்வேறு ஜனநாயகப் பண்புகளை நாட்டுக்குள் கொண்டு வந்திருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

இந்தத் தேர்தல் அமைதியான முறையில் இடம்பெற்றமையே அதற்கு பெரும் சான்றாகும். அதேபோல தேசிய அரசுக்குள் இருந்த பனிப்போர் தேர்தல் காலத்தில் வெளிப்பட்டது.

அரசுக்குள்ளேயே பல்வேறு விமர்சனங்கள் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அதற்கு ஜனாதிபதியே முன்னிலை வகித்தார் என்று சொல்லலாம்.

தன்னை தவறற்றவர் எனக் காட்டிக்கொள்வதற்காக ஜனாதிபதி மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளும் ஆளுகின்ற அரசாங்கத்தின் மீது அதிருப்தியை ஏற்படுத்தி விட்டிருக்கின்றது.

கடந்த ஆட்சியில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றதற்கான ஆதாரங்கள் பல இருந்த போதும் அவை குறித்த விசாரணைகள் துரிதப்படுத்தப்படவில்லை.

பெரும் ஊழல் மோசடிகளுக்கு மாறாக சிறு, சிறு குற்றங்களைக் காரணம் காட்டியே கைதுகளும் விசாரணைகளும் இடம் பெற்றன. அதேநேரம் தேசிய அரசில் இடம்பெற்றது எனக்கருதப்படும் பிணை முறி விவகாரம் தொடர்பில் துரிதமாக விசாரணைகள் நடைபெற்றதுடன் தேர்தல் காலத்தில் அந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டமை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாகப் பெரும்தோட்டப் பகுதிகளில் பிணை முறி மோசடியின் காரணமாக தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி சூறையாடப்பட்டுள்ளது என அரசுக்கு எதிராகக் கொண்டு செல்லப்பட்ட பிரசாரம் மக்களை அச்சத்துக்கு உள்ளாக்கியது.

தோட்டத் தொழிலாளர்களின் ஒரே சேமிப்பாகவும் சொத்தாகவும் இருப்பது ஊழியர் சேமலாப நிதிதான். அதனை இழக்கப் போகிறோம் என்ற பய உணர்வு அவர்களிடத்தில் அழுத்தமாக முன்வைக்கப்பட்டதை இறுதி நேர தேர்தல் பரப்புரைகளின்போது எம்மால் உணரக் கூடியதாக இருந்தது.

நகரை அண்டிய தோட்டப் பகுதிகளின் தேர்தல் முடிவுகளைப் பார்க்கும்போது அது நன்றாகவே புலப்படுகின்றது. நாம், ஹற்றன் நகர சபையையும், நுவரெலியா மாநகர சபையையும் வெற்றி கொண்ட அளவுக்கு தோட்டப் பகுதிகள் அதிகமாகவுள்ள பிரதேச சபைகளில் ஆசனங்களை பெற முடியாமல் போனமைக்கு இதுவே காரணமாகும்.

எனினும், புதிதாக உருவாக்கப்பட்ட மஸ்கெலியா பிரதேச சபையை கைப்பற்றியுள்ளோம். ஹற்றன் நகர சபையை வெற்றிகொண்டது எனக்கு எதிரான விஷம பிரசாரத்துக்கு எதிராகக் கிடைத்த வெற்றியாகவே பார்க்கிறேன்.

தேசிய அரசின் உள்ளார்ந்த முரண்பாடுகளும் ஒரு சிலரின் ஊழல் மோசடிகளும் நாடளாவிய ரீதியாக மக்கள் மனதில் அதிருப்தியை காட்டியுள்ளன.

குறிப்பாக, பிணை முறி விவகாரம் நாடு தழுவிய ரீதியாக ஐக்கிய தேசியக் கட்சியின் பின்னடைவுக்கு காரணமாகியுள்ளமை புலனாகிறது. மலைநாட்டிலும் இதுவே நிலைமை.

எது எவ்வாறாயினும் எமக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதோடு மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிக்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்மொழிக்கு கிடைத்த அங்கீகாரம்!

கொழும்பு,பெப். 13
கூகிள் நிறுவனம் தமிழ் மொழிக்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

அந்த வகையில் கூகிள் நிறுவனத்தின் பயன்பாட்டுக்கு தமிழ் மொழியும் உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

பயன்பாட்டிற்கென மொத்தமாக 41 மொழிகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், இலங் கையில் பேசப்படும் மொழிகளில் தமிழ் மாத்திரமே இந்த அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டுள்ளது. இந்த அறிவிப்பின் அடிப்படையில் தமிழ்மொழியில் அமைத்து தமிழ் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளை இலக்கு வைத்து பிரபலப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை மனித உரிமை மீறல்களை ஆராய்ந்த ஐ.நா. நிபுணர் அஸ்மா ஜஹான்கீர் காலமானார்!

கொழும்பு, பெப். 13
இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய்வதற்கான ஐ.நா. நிபுணர் குழுவில் இடம்பெற்றிருந்த அஸ்மா ஜஹான்கீர் நேற்றுக் காலமானார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் நாயகமாக நவநீதன் பிள்ளை செயற்பட்டிருந்த காலத்தில் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

இந்த நிபுணர் குழுவில் பாகிஸ்தானின் உச்சநீதிமன்ற சட்டத்தரணியும் ஆசியாவின் மிகச் சிறந்த மனித உரிமைப் போராளிகளில் ஒருவருமான



அஸ்மா ஜஹான்கீர் உள்ளடக்கப்பட்டிருந்தார்.

அவரது குழுவினர் ஐ.நா. சபைக்கு சமர்ப்பித்த அறிக்கையில் இலங்கை அரசாங்கம் மற்றும் இராணுவத்தினரின் அப்பட்டமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தெளிவாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசு பதில் சொல்ல வேண்டிய கட மைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது என பின்னாளில் அவர் இலங்கையின் ஆங்கில ஊடக மொன்றுக்கும் சர்வதேச ஊடகங்கள் பலவற்றிலும் எழுதியிருந்தார்.

இந்த நிலையில் தனது 66 வயதில் அஸ்மா ஜஹான்கீர் நேற்று காலமானார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இருதய நோய் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார் என தெரிய வந்துள்ளது

## சுமுகமான தேர்தலை நடத்துவதற்கு ஊடகங்களே காரணம்: ஊடகப் பேச்சாளர்!



கொழும்பு, பெப். 13
கடந்த 10 ஆம் திகதி நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மிகவும் சுமுகமாக நடைபெற்று முடிவதற்கு ஊடகங்களின் ஒத்துழைப்பே காரணம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து ஊடகங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இனிவரும் காலங்களிலும் இவ்வாறு சுமுகமான முறையில் நாட்டின் சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஊடகங்களின் பங்களிப்பு தமக்குத் தேவை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## தனிப்பட்ட உயர்தரப் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்!

கொழும்பு, பெப். 13
2018 உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் பாடசாலை பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் எதிர்வரும் 23ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அடையாள அட்டையை வழங்குவதற்காக ஆட்பதிவுத் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இது பற்றி ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளருடன் தாம் பேச்சு நடத்தியுள்ளோம் என ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார். (க)

# ஓமந்தையில் ரயில் பாதையை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்!

வவுனியா – ஓமந்தை, பெரியவிளாத்திக்குளம் கிராமத்துக்குச் செல்லும் வீதி ரயில் திணைக்களத்தால் மூடப்பட்டுள்ளமையைக் கண்டித்து அந்தக் கிராம மக்கள், ரயில் பாதையை மறித்து நேற்றுக் காலை 7 மணிமுதல் பிற்பகல் 3 மணி நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களின் ஆர்ப்பாட்டத்தால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த கடுகதி ரயில் இரண்டு மணி நேரம் ஓமந்தை ரயில் நிலையத்தில் தரித்து நின்றே பயணத்தைத் தொடர்ந்தது.

இதன்போது கருத்து தெரிவித்த போராட்டத்தின் ஏற்பாட்டாளர் ஒருவரான மகேஸ்வரன்,

சுமார் 300 வருடங்கள் பழைமை வாய்ந்த ஓமந்தை பெரியவிளாத்திக்குளம் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதி ஓமந்தை ரயில் நிலையம் அமைக்கப்பட்டபோது தற்காலிகமாக மூடுவதாக தெரிவித்து இரவோடு இரவாக மூடப்பட்டது.

கடந்த 7 வருடங்களாக இந்த வீதியைத் திறந்துவிடுமாறு பிரதமர் உட்பட ரயில் திணைக்கள அதிகாரிகள் பலரிடமும் கோரிக்கை விடுத்தோம். எனினும் எவரும் செவிசாய்க்கவில்லை. இதனால் எமது கிராமத்துக்கு சுமார் 3 கிலோ மீற்றர் தூரம் சென்று வரவேண்டிய வீதியொன்றைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துமாறு தெரிவிக்கின்றனர்.

அந்த வீதிகூடச் செப்பனிடப்படாத வீதி. இதனால் மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார் உட்பட பலரும் பெரும் அசௌகரியங்களைக் கடந்த 7 வருடங்களாக எதிர்கொண்டு வருகின்றோம். எவ்வித தீர்வும் கிடைக்காத நிலையிலேயே நாம் இந்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம். – என்றார்.

இந்தப் போராட்டத்தில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் ரயில் தண்டவாளத்தில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது சம்பவ இடத்துக்கு விரைந்த பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் சமரசத்தில் ஈடுபட முயற்சித்தபோதிலும் அது தோல்வியடைந்தது.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கையில் நியாயம் இருப்பதாகத் தெரிவித்து அது தொடர்பில் உரியவர்களுடன் கலந்துரையாடும் வகையில் திங்கட்கிழமை அலுவலகத்துக்கு வருமாறு தெரிவித்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், போராட்டத்தை கைவிட்டுள்ளதுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு ஒரு வாரத்துக்குள் தீர்வு காணப்படாவிடின் மீண்டும் போராட்டம் நடத்தப்படும் என எச்சரித்தனர். (ஐ)

# அர்ஜுன் அலோசியஸிடம் சிறையிலும் விசாரணைகள்



கொழும்பு, பெப்.13

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பேர்பேச்சுவல் ட்ரெரீஸ் லிமிட்டட் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ், அந்த நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரை வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்து விசாரிப்பதற்குக் குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு (சி.ஐ.டி) கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

இந்த வழக்கு நகர்த்தல் பத்திரத்தினூடாக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது, 13,14,15 ஆம் திகதிகளில் சந்தேக நபர்கள் இருவரிடம் மேலதிக விசாரணை மேற்கொள்வதற்கு அனுமதிக்குமாறு கோரியமைக்கு அமையவே அனுமதி வழங்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு பெப்ரவரி 27ஆம் திகதி இடம்பெற்ற பிணைமுறி ஏலத்தில் சுமார் 68 கோடி ரூபா நிதி இழப்பு ஏற்பட்டமைக்கு அர்ஜுன் மகேந்திரன் பொறுப்பாக இருந்தார் என்றும் அவருக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டின் கீழேயே மூவருக்கும் எதிராக 'பி' அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

இக்குற்றங்களைப் புரிவதற்கு அர்ஜுன மகேந்திரனுடன் இணைந்து சதி செய்தார் என்று அவருடைய மருமகனான அர்ஜுன் அலோசியஸுக்கு எதிராகவும் உடந்தையான இருந்தார் என்ற குற்றச்சாட்டில் கசுன் பலிசேனவுக்கு எதிராகவும் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, அர்ஜுன மஹேந்திரன் நாட்டுக்குத் திரும்பினால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும் என்றும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்துக்கு கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டார்.

அத்துடன், எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு கோட்டை நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தீய சக்திகள் தலைதூக்க பொதுமக்களே காரணம்

## கூறுகின்றது ஜே.வி.பி.

நாட்டில் மீண்டும் தீய சக்திகள் ஆட்சியை அமைப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியதன் பொறுப்பை மக்களே ஏற்க வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தத் தேர்தலில் தமது கட்சி எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்கவில்லை. இருப்பினும் குறிப்பிடத்தக்களவு வாக்குகளை நாம் பெற்றுள்ளோம்.

மேலும், மைத்திரி மற்றும் ரணிலின் அரசை மக்கள் நிராகரித்துள்ளமையை இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வாயிலாக நாம் அறிந்துக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இருப்பினும், கடந்த தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட தீய சக்திகள் இந்தத் தேர்தலில் மக்களால் தலைதூக்கியுள்ளன. – என்றார். (ஐ)

# ஜனாதிபதியாக மீண்டும் மஹிந்த வரவேண்டும்

## சுப்ரமணியசுவாமி விருப்பம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்க வேண்டுமென இந்திய மத்திய அரசின் முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுப்ரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

கடந்த 10ஆம் திகதி இலங்கையில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த விரைவில் இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக்கொள்ளவேண்டுமென, அவர் நேற்றுத் தனது டுவிட்டர் கணக்கில் பதிவிட்டுள்ளார். மஹிந்தவின் அரசியல் மீள் பிரவேசம் வலுவாகக் காணப்படுவது மகிழ்ச்சி அளிக்கின்றது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

இப்போது உங்கள் அன்ரோயிட் தொலைபேசிகளிலும்
'DAN TV'



செல்லுமிடமெங்கிலும்
உங்கள் "DAN TV" யை
உங்களுடனேயே
எடுத்துச் செல்லுங்கள்

அப்ளிகேசனை நிறுவி இலவச
கணக்கொன்றை ஆரம்பிப்பதன்
மூலம் டான் குழுமத்தின் அனைத்து
சேவைகளையும் கண்டு மகிழுங்கள்



GOOGLE Play Store சென்று "DAN TV" என தேடுவதன் மூலம் எமது அப்ளிகேசனை பெற்றுக்கொள்ளலாம்

சிவராத்திரியில் அனவருள் கிட்டட்டும்!
சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம்
பெற்ற சாரதிப்
பயிற்சிப் பாடசாலை



முறைமையான சாரத்தியத்தைக்
கற்றுக் கொள்ள எம்முடன்
இணைந்து கொள்ளுங்கள்

sasika Learners
sasika driving School@gmail.com.

தலைமைக் காரியாலயம்:
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE- 077 722 6247
021 2217678, 0776140361

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும்.
(கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

கிளை நிறுவனங்கள்:
இல – 821 C, மணிக்கூட்டுகோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகில்)
021 222 8004


வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
0703013012

கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்
021 224 3393
0703013014

சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
0703013016

★ விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறை அடிப்படையில் செலுத்த முடியும்.
★ எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
★ எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
★ எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
★ விரைவில் எழுத்துப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.



# சிவனுக்குகந்த சிவராத்திரி தினம்

## 13.02.2018



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

மஹா சிவராத்திரி நன்னாளில் சிவனருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

Rube Jewellery Since 1982

நம்பிக்கை, கைராசி மற்றும் தரம்குன்றா

தங்கநகை உலகில் 35 வருடம் அனுபவம் வாய்ந்த நாங்கள் உலகின் பல பாகங்களிலும் இருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# ரூபி ஜுவல்லறி

சிங்கப்பூர் தரத்திலான தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

எம்மிடம் கடன் அட்டைகள் மூலம் கொள்வனவு செய்யும் வசதியும் உண்டு.

எமக்கு யாழ் நகரிலோ, இலங்கையின் எப்பாகத்திலோ வேறு எந்தக் கிளைகளும் கிடையாது என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

S.N.G. BUILDING

RUBE JEWELLERS

இல: 227 - 229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 6919, 0777 344 074

இன்றைய மஹா சிவராத்திரி நன்னாளில் காரைநகர் ஈழத்துச் சிதம்பர சிவனார் நல்லருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

தூய்மையானதும் நீண்டகாலம் பாவிக்கக் கூடியதுமான இல்லத்தரசிகளின் ஒரே தெரிவு

LITRO GAS லிற்றோ

தேசிய எரிவாயு ஏக விநியோகஸ்தர்

# S.V. முருகேசு

No. 154 Hospital Road, Jaffna.
T.P : 021 222 8899, 021 492 5831
No. 106 Hospital Road, Jaffna.
T.P : 021 492 5830, 021 222 4341
Fax: 021 222 4341

# கிருபா சாரதிப் பயிற்சிப் பாடசாலை

# KIRUBA LEARNERS



வட மாகாணத்தின் முதல் தர

அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை

திறமையான சாரதிகள் ஆக வேண்டுமா? கிருபா லேணர்ஸ் உடன் இணையுங்கள்.

**சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்**

- அடையாள அட்டை
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதி)
- திருமண அத்தாட்சிப் பத்திரம் (பெண்கள் மட்டும்)
- சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)
- தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் வழங்கும் மருத்துவச் சான்றிதழ்

★தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.

★பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், மாதிரி வினாத்தாள் இலவசமாக வழங்கப்படும்.

★விரைவில் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.

★எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு விசேட வீதிஒழுங்குவகுப்புக்கள்நடைபெறவுள்ளன.

★விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்து LEARNER PERMIT பெற்றுத் தரப்படும்.

★License விண்ணப்பிக்கும் ஒழுங்குகள் எங்கள் காரியாலயத்திலே செய்து தரப்படும்.

★உடைந்த, தொலைந்த தெளிவில்லாத License புதுப்பிக்க ஒழுங்கு செய்து தரப்படும்.

★சர்வதேச லைசன்ஸ் International License பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி உண்டு.

★இலவச எழுத்துப் பரீட்சை வகுப்புகள்.

**தலைமைக் காரியாலயம்**

இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

021 222 4353 021 492 3200

0777225292

ஏ9 வீதி, கிளிநொச்சி.
021 228 5505,
0714546955.

இல.94, பிரதான வீதி, மன்னார்
023 225 1656,
0778472732

216, ஏ9 வீதி, வவுனியா.
(வசந்தி திரையரங்கு முன்)
0242227777,
0777100444

## எமது கிளைகள்

யாழ். கச்சேரியடி, இல.36 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6699, 076 7225 292

இல.227/6, கே.கே.எஸ். வீதி சுன்னாகம். (மதவடி அருகில்)
021 224 2022, 0714546956.

ஓம் பிளாசா, பருத்தித்துறை வீதி, ஆவரங்கால்.
021 222 6688, 071 242 2622.

பிரதான வீதி, நெல்லியடி. (பொலிஸ் நிலையம் முன்பாக)
021 300 6550, 0714546958


முதலாம் கடைச் சந்தி, பருத்தித்துறை.
021 4923 201, 0714546961

கண்டி வீதி, சாவகச்சேரி. (நீதிமன்றம் அருகில்)
021 4923 202, 0712270700.


வாடியடிச் சந்தி, பூநகரி.
021 320 1818, 071 4546955.

புளியடிச் சந்தி, முல்லை வீதி, விசுவமடு.
0213201515, 0714546955.

நாச்சிக்குடாச் சந்தி, மன்னார் வீதி, முழங்காவில்.
021 3006544, 071 4546955



# சிவனுக்குகந்த சிவராத்திரி தினம்












































உங்கள் ஓம் ரிவியில் சிவராத்திரி தினமாகிய
இன்று மாலை 7.00 முதல் நேரலையாக ஒளிபரப்பாகும்.



# சிவனுக்குகந்த சிவராத்திரி தினம்

13.02.2018